விலை சதம் 60

பக்கங்கள் — 10

பாவியுங்கள்
நாள் எல்லாம்
நறுமணம் கமழும்
அண்ணு பத்தி
ஜெயந்தி பத்தி
கஜானு பத்தி

NATIONAL LIBRARY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1980-4-21
PERIODICALS DIVISION
LIBRARY

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

நோயற்ற வாழ்வே
குறைவற்ற செல்வம்
மில்க்வைற் நீல சோப்
மேலுறைகள் 50அனுப்பி
யோகாசன பயிற்சிப் படங்களையும், 'யோகக்கலை'
என்ற நூலையும் பெற்று
யோகாசனத்தை இலகுவில்
கற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்

மலர் 32 | சித்திரை 8 | ஜ ஆகிர 4 | ஞாயிற்றுக்கிழமை | (20—4—80) | இதழ் 70

# வடபகுதி ஆசிரியர்களுக்கு
# காசோலை மூலம் சம்பளம்

## அதிபர்கள் சங்க குழுவிடம் கல்வி அமைச்சு உறுதி

(யாழ்ப்பாணம்)

**வடபகுதியிலுள்ள ஆசிரியர்களுக்கான சம்பளத்தை அடுத்த மாதம் முதல் காசோலை மூலம் வழங்க கல்வியமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.**

**ஆசிரியர்களின் சம்மதத்துடனேயே காசோலைகள் மூலம் சம்பளத்தை வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

வடமாகாண அதிபர்கள் சங்கக் குழுவொன்று கல்வி அமைச்சின் செயலாளர் திரு. றெக் டீ சில்வா, மேலதிக கல்வி மாஅதிபர் திரு. டபிள்யூ டி சி. மகாதந்தில, கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் திரு டி. ரி. பி. குணவர்த்தன ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோதே மேற்கண்ட இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

வங்கிகளுக்குச் சென்று சம்பளக்காசோலையை மாற்றிப் பணத்தைக் கொண்டு வருவதில் அதிபர்களுக்கு ஏற்படக்கூடிய உயிர் ஆபத்தை அதிபர்கள் குழு எடுத்துக்கூறியதை அமைச்சு அதிகாரிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்றும் இதற்கான அனுமதியை வடமாநில கல்வி அதிபதி ஊடாக பாடசாலைகளுக்கு வழங்குவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்வதாக அவர்கள் வாக்குறுதி அளித்துள்ளனர் என்றும் அதிபர்கள் சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

### ஏப்ரல் சம்பளம்...

இதேவேளையில் கல்வி அமைச்சு மேற்கூறிய இணக்கத்தைத் தெரிவித்ததையடுத்து இம்மாதச் சம்பளத்திற்கான காசோலையை வழமைபோல் வங்கிகளுக்குச் சென்றுமாற்றி பணத்தை எடுத்துவருவதென்று சங்கத் தலைவர் திரு. ஏ. நடராசா தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கல்வியமைச்சின் அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிப்பதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ)

### திருத்தம்

13-4-80-ந் திகதி முற்பக்கத்தில் பிரசுரமான பிறந்த தின வாழ்த்து விளம்பரத்தில் செல்வி இ. தயாளினி என்றிருப்பது செல்வி தே. தயாளினி என்றிருத்தல் வேண்டும். 5519

## "தேசியஒற்றுமையைவளர்க்க மகாவலி ஒரு ஆயுதம்"
### யாழ். நகரில் லெஸ்லி ரூபசிங்க

(யாழ்ப்பாணம்)

'இந்த நாட்டில்வாழும் இரு பெரும் சமூகங்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த மகாவலித் திட்டத்தை ஓர் ஆயுதமாக உபயோகிக்க விரும்பியே அந்த சிரமதான வேலைகள் ஆரம்பிக்கப் பட்டன.'

இவ்வாறு மகாவலி சிரமதான இயக்க உபசெயலாளர் திரு லெஸ்லி ரூபசிங்கா யாழ்ப்பாணத்திலிருந்து மகாவலிக்கு ஓயா செல்லும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் பேசுகையில் கூறினர்.

திரு. லெஸ்லி ரூபசிங்கா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

,30 வருடங்களில் பூர்த்தியாக வேண்டிய மகாவலித்திட்டத்தை6 வருடங்களில் முடித்து இந்த நாட்டிலிருந்து பட்டினிப்பேயை விரட்ட விரும்பி ஜனதிபதி அதற்காகவே சுறுசுறுப்பு மிக்க இளைஞரான திரு. காமினி திசநாயக்காவை அமைச்சராக நியமித்துள்ளார்.

'இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்து மதுறு ஓயாவிற்குச் சென்றவர்களிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் இருந்து செல்பவர்களே இளைஞர்கள். ஏனையவர்களைக் காட்

(10-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் காங்கிரஸிலிருந்து
# வெளியேற்றப்பட்டவர்கள் உரிமை கோர முடியாது!
### காரியாலயத் திறப்பு விழாவில் குமார்

(யாழ்ப்பாணம்)

'தமிழ்க் காங்கிரஸ் கட்சியைவிட்டு வெளியேற்றப்பட்டவர்கள் இன்றும் தாங்களே தான் கட்சியின் சொந்தக்காரர்கள் எனக் கூறிவருகிறார்கள். இனிமேலும் அவர்கள் அவ்வாறு உரிமைகொண்டாடுவார்களேயானல் எமது கட்சியில் இருந்து கொழுந்துவிட்டெரியும் புனிதத் தீயில் எரிந்து சாம்பலாகிவிடுவார்கள்.'

அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சிக் காரியாலயத் திறப்பு விழாவில் பேசிய திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினர்.

சட்டத்தரணி திரு. எஸ் ஆர். கனகநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திருவாளர்கள் எஸ். செல்வராசா, ஏ. சி. மூர்த்தி ஆகியோர் குத்துவிளக்கேற்றினர். திரு. எஸ் ஆர் கனகநாயகம் கட்சிக்கொடியை ஏற்றிவைத்தார். கட்சிப் பெயர்ப்பலகையை திரு. ஆர். என் சிவப்பிரகாசம் திரைநீக்கம் செய்துவைத்தார். திரு. எஸ். இளையதம்பி மலர்தூவி அச்சுயந்திரத்தை இயக்கி அச்சகத்தை ஆரம்பித்து வைத்தார்.

காங்கிரஸ் கட்சியின் யாழ். மாநகரசபை உறுப்பினர்களான டாக்டர் ஏ. எல் ஏப்ரஹாம், திருமதி அந்தோனியா சுவாமிநாதர்' திரு. மரியாம்பிள்ளை, சவுந்தரம் ஜனப்காசிம், திருமதி குமார் பொன்னம்பலம், திரு முதலியார் உட்பட மற்றும் பல பிரமுகர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

திருவாளர்கள் எஸ். ஆர். கனகநாயகம் ஆர். என். சிவப்பிரகாசம் ஆகியோர் கட்சித்

(10ம் பக்கம் பார்க்க)

### தேவை

அலுமினிய தொழிற்சாலைக்கு வேலை தெரிந்த ஸ்பின்னர்கள், பொலிசர்கள், லேத்மன்கள் (LATHEMEN) வேலை பழகுபவர்கள் உடனடியாகத் தேவை.

விபரங்கட்கு நேரில் வரவும்.

**CHELSONS METAL INDUSTRIES**

118, K. K. S. ROAD — JAFFNA. (5504)

### புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய மணிக்கோபுர கும்பாபிஷேகம்

காலம்: ரௌத்திரிவருடம் சித்திரைத்திங்கள் 9-ம் நாள்(21-4-80) திங்கட்கிழமை காலை 9-00-10 00.

இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்பட்ட மணி அபிஷேகம் செய்யப்பட்டு திருமணிக்கோபுரத்திலிருந்து ஒலிக்கும் இவ்வைபவத்தில் கலந்து திருவருள் பெறுமாறு அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(5522)

## 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இறந்த பெண்ணின் உருக்குலையாத சடலம்!
### சீனவில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது

பீக்கிங், ஏப். 19

3000 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்த சீனப்பெண்மணி ஒருவரின் சடலம் ஒன்று சின-ஷிங்காய் மாகாணத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இப்பெண்மணியின் பற்கள், நகங்கள் ஆகியன பழுதடையாமல் இருப்பதாகவும் முகத்தின் தசைநார்களும் கண்களும் அப்படியே பழுதாகாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

3 ஆயிரம் ஆண்டுகளாக கல்லறை ஒன்றில் இச்சடலம் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது. (ர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திராவுக்கு கத்தி வீசிய இளைஞருக்கு கத்திக்குத்து

(புதுடில்லி ஏப். 18)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைக் கொலை செய்ய முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள ராம் என்லால் வாணி என்ற நபரை கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் முறியடிக்கப்பட்டது.

செங்கமாரி நோய்க்கு சிகிச்சை பெறும் பொருட்டு பரோடா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த அந்நபரை அவருக்கு அருகில் படுத்திருந்த இன்னுமொரு நோயாளி கத்தியால் குத்திக் கொலை செய்ய முயன்றாராம்.

இதை அடுத்து அந்நபர் கத்திக்குத்துக் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார் (இ)

## செங்கலடி கொள்ளை எதிரிகள் பிணையில் செல்ல அனுமதி மறுப்பு!

(கொழும்பு)

செங்கலடி கிராமிய வங்கிக் கொள்ளை வழக்கின் எதிரிகள் மீது பாரதூரமான குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவர்கள் அடுத்த தவணையில் விசாரணைக்குச் சமுகந்தராது தலைமறைவாகலாம் எனவே அவர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்கமுடியாது.

இவ்வாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ஏ. எஸ். எம். செனிவிரத்ன நேற்று தீர்ப்பு வழங்கினார். (ம-இ)


### பெயர் மாற்றம்

சுன்னாகத்தில் வசிக்கும் எனது மகன் சுப்பிரமணியம் விமலநாதன் தனது பெயரை பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் சுப்பிரமணியம் விமலானந்தன் என மாற்றம் தீர்மானித்துள்ளார் என்பதை இலங்கை ஜனநாயக குடியரசுக்கும், பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

பொ. சுப்பிரமணியம்
சுன்னாகம்
5514


## யாழ். பஸ்நிலைய வைரவர் ஆலய கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன சந்தை, பஸ் நிலையம் ஸ்ரீ ஞானவைரவர் கோவில் மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது

பிரதிஷ்டா சிரோமணி பிரம்மஸ்ரீ சாமி. விஸ்வநாதக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பார்கள். இரவு விசேஷ பூசையும், ஆராதனைகளும் நடைபெறும். நாதஸ்வர கலாநிதி அளவெட்டி என். கே. பத்மநாதன் குழுவினரின் மேளக்கச்சேரியும், இன்னிசைக்கச்சேரியும் இடம்பெறும். (கு)

## புளியங்கூடல் மகாமாரி ஆலய கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

தீவுப்பகுதியில் பிரசித்தி பெற்ற ஆலயமான புளியங்கூடல் 'செருத்தனைப்பதி' ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய இராஜகோபுர, மூலஸ்தான, மகாகும்பாபிஷேகம் நாளை காலை நடைபெறவிருக்கிறது.

சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இராசகோபுரம் 1975-ம் ஆண்டு தேவஸ்தான முன்னாள் ஆதீனகர்த்தா அமரர் திரு சு. துரையப்பாவால் அத்திபாரமிடப்பட்டது.

இம்மாதம் 24-ந் திகதி வியாழக்கிழமை 'நவகுண்ட யாகாரம்பம்' நடைபெறும். 28-ம் திகதி நடைபெறும் மகாகும்பாபிஷேக நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி அஞ்சல்செய்ய ஏற்பாடாகியுள்ளது. பிரதம சிவாச்சாரியராக இணுவில் சிவஸ்ரீ கு. இராமநாதக்குருக்கள் கடமையாற்றுவார். (கு)


### நன்றி நவிலல்

அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி றக்கிலியின் மரணச்சடங்கின் போது நேரில் வருகை தந்தும், மலர் வளையங்கள், அனுதாபச்செய்திகள் அனுப்பியும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்த நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தனித்தனி நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

சென்ற் ஜோர்ஜ் குடும்பத்தினர்
அச்சுவேலி. (5498)

நீர் இன்றி அவஸ்தைப்படுகின்றீர்களா!
நிலநீர் வல்லுநர் மூலம் நிலையம் எடுத்து கிணறு அமைத்துக்கொடுக்கப்படும்.
இதற்கான செலவு ரூபா 4 500/-
(குழாய் பொருத்துதல் உட்பட) மட்டுமே.
கிணறு திருப்திகரமாக அமையாவிடின் பணம் மீளளிக்கப்படும்
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
CARAN FARM சுதுமலை, மானிப்பாய்.
5516


விஜயம் செய்யுங்கள்
உங்களுக்குத் தேவையான
தங்க வைர, நகைகளை
நவநாகரிக டிசைன்களில் பெற்றுக்கொள்வதற்கு
நம்பிக்கையுள்ள சிறந்த ஸ்தாபனம்
செல்லையா சிவபாதலிங்கம்
220, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 7794)
552

மகத்தான மங்களத் திறப்பு விழா
அழைப்பு





நாளை (21-4-1980) திங்கட்கிழமை
காலை 6 மணி தொடக்கம்
7 மணிவரையுள்ள சுபவேளையில்
எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற
பிறிலியன்ற் ஜுவல்லர்ஸ்
BRILLIANT JEWELLERS
என்னும் ஸ்தாபனம் திறந்துவைக்கப்படும்.
அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
நவீன டிசைன்களில் தரமான, நம்பிக்கையான பவுண், தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள
விஜயம் செய்யுங்கள்!
நம்பிக்கையான ஸ்தாபனம்!!
பிறிலியன்ற் ஜுவல்லர்ஸ்
240/1, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். (5515)

## வரி விளம்பரம்


### தேவை

மன்னார் பசாரில் மொத்தமாகவும், சில்லறையாகவும், எந்தத் தொழிலை செய்யவும்; எல்லா வசதிகளுமுள்ள தொடராகக் கட்டப்பட்ட கடைகள், உண்டு பண்டகசாலைகளோ அல்லது வேறு அடிப்படையிலோ, தொழில் செய்ய விரும்புபவர்கள், கீழ்க்காணும் முகவரியிலோ, அல்லது நேரிலோ தொடர்பு கொள்ளலாம். மனேஜர், சிங்கர் கம்பனி, யாழ்ப்பாணம். அல்லது, டோன் ஸ்ரோர்ஸ், 205, 2-ம் குறுக்குத்தெரு கொழும்பு. 5524

குளிர்பான, தேனீர்ச்சாலைக்கு சப்ளையர்களும், சமையல்காரர்களும் தேவை நேரில் தொடர்பு கொள்ளவும். லக்கி ஹவுஸ், பஸ் நிலையம், காங்கேசன்துறை. 5526

கூட்ட ஒட்டுவதற்கும், அடிப்பதற்கும் நன்கு அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். கே. கிருஷ்ணபிள்ளை, 23, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 5529

### விற்பனைக்கு

மானிப்பாய் தெற்கு, நாச்சிமார் கோவில் வீதியின் தொடக்கத்தில் 15½ பரப்புக் காணியும் பழைய வீடும் விற்பனைக்கு உண்டு. பரப்பு 6,000 ரூபாவிற்கு மேல், R. J. இராஜேந்திரன், 308 கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை. 5520

நல்ல நிலையில் உள்ள HONDA CB 350 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு புதிய பற்றரியும் இரு ரயர்களும் உண்டு. தொடர்புகொள்ளவும். சாந்திரடர் வேக்ஸ், 218/2 முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 8695 5494

### விற்பனைக்கு

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட தச்சு வேலைகள் செய்யக்கூடிய மேசைப்பட்டடை (மோட்டார் சிங்கிள்பேஸ்) நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடவும், விபரங்களுக்கும் எஸ். நாதன், 33, பாரதி லேன், கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். 5509

இரண்டு முற்றிய வேம்பு மரங்கள் உடன் விற்பனைக்கு உண்டு. திலகரத்தினம், டச்சு றோட், அளவெட்டி. 5488

### குத்தகைக்கு

முத்தையன் கட்டுத் திட்டத்தின் கீழ் பேராற்று வலது கரையில் நீர்ப்பாசன வசதியுடனும் ஆற்றிலிருந்து தண்ணீர் அடிக்கக் கூடிய வசதியுடனும் வெங்காயம், மிளகாய் மற்றும் தோட்டச் செய்கைக்கும் உரிய தரை குத்தகைக்குண்டு. கடித மூலம் தொடர்பு: விளம்பர இல. 1486 c/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5486

### கல்வி

அகுபங்சர் விரிவுரைகள் - சீன அகுபங்சர் வைத்திய விரிவுரைகள் தமிழில் மே மாதத்தில் ஆரம்பமாகவுள்ளது. விண்ணப்பப் படிவத்தையும் மேற்கொண்ட விபரங்களையும் ரூபா. 3 00 க்குரிய தபால் கட்டளையை அனுப்பி, வட இலங்கை ஹோமியோபதி சங்கம், 5, நாவலர் வீதி, (ஐந்து சந்தி) யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். 5507

### பயிற்சி

வெளிநாடு செல்ல ஆவலை எதிர்பார்ப்பவர்களே! பாடசாலையால் வெளியேறும் மாணவர்களே! ஆறு மாத காலத்தில் சிறந்த செய்முறைப் பயிற்சியுடன் கூடிய புதிய வகுப்புக்கள் 1-5-80ல் ஆரம்பம். எலெக்ரிக் வயறிங், வெல்டிங், மோட்டோர் மெக்கானிசம் ஆகியவற்றில் பகல், மாலை, வார இறுதி வகுப்புகள் நடைபெறவுள்ளன விபரங்கட்கு: Patrician Industrial Institute, 59, St. Patricks Rd, Jaffna 5479


## உலொறி பொடி அடித்தல்

[illegible] சங்கத்தின் புதிய இசுஸ் (Isuzu) உலொறிக்கு பொடி அடிப்பதற்கான கேள்வி விண்ணப்ப முடிவு திகதி 25-04-80 திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பொது முகாமையாளர்
பூநகரி ப. நோ. கூ. சங்கம்
பூநகரி

18-04-80 5 8


Brownson
வாங்குங்கள்
பிரவுண்சன் அரறூட்-மா
பிரவுண்சன் அரறூட் மா அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டது.


## எரி பொருள் ஒழுகும் பஸ் வண்டிகள்


[அரியாலை]

இ. போ. ச. பிரதேச போக்குவரத்துச்சபை யாழ்ப்பாணப் பகுதியில் [illegible] பஸ்வண்டிகளைக் கொண்டு சேவை நடத்திவருகின்றது [illegible] எரி பொருளை ஒழுகவிடும் பஸ் வண்டிகளையும் சேவையில் ஈடுபடுத்திவருவது குறிப்பிடத்தக்கது

எரிபொருள் ஒழுகி ஓடிக்கொண்டிருந்த நிலையிலிருந்த ஒரு பஸ்வண்டி சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டதை கடந்த செவ்வாய்க்கிழமை பகல் யாழ் பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காக காத்திருந்த ஏராளமான மக்களால் அவதானிக்க முடிந்தது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாள் வரும் வரை...!



எங்கள் வீட்டு மொட்டை மாடியிலிருந்து கொண்டு எதிர்வீட்டுக் கல்யாண நிகழ்ச்சிகளில் கவனம் செலுத்துகிறேன் அழகிய வெள்ளை நிறக்காரிலிருந்து மாப்பிள்ளைத் தோழனோடு பெண்வீட்டார் சிலரும் இறங்கிக் கொள்கிறார்கள். அதனைப் பின்தொடர்ந்து ஒன்றின்பின் ஒன்றாகச் சிலகார்கள் வந்து நின்றன.

வாசலிலே வாழைமரம் வைத்து காகிதப்பூக்களால் அலங்கரிக்கப்பட்ட பந்தலினுள்ளே சம்பிரதாயப்படி மாப்பிள்ளைத் தோழனும் மற்றவர்களும் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

எந்தவித அலங்காரமுமின்றி அன்றைய கதாநாயகனை 'குணபாலன்' பந்தலினுள்ளே வந்து அனைவரையும் வரவேற்கும் பாவனையில் தலையை அசைத்து புன்னகை உதிர்த்தபடி நிற்கிறான். அழகிய விலையுயர்ந்த கம்பள விரிப்பின் மேல் மணமக்களுக்கென்ற அமைக்கப்பட்டிருக்கும் அந்த மேடையின் மீது அங்கே நின்றவர்கள் தோழனை அமர்த்துகிறார்கள்.

"ஏன்? மாப்பிள்ளையைக் கூட்டிக் கொண்டுபோய்த் தோய வாத்துக்கொண்டு வாருங்கோ... நாள் நேரம் போகப் போகுது." ஒரு குரல்! "வந்தவர்களைச் சாப்பிடப் பண்ணுங்கோ" மற்றொரு குரல்!

சாப்பாட்டுக்காக அனைவரும் அழைக்கப்படுகிறார்கள்... சாப்பாட்டு நேரத்துக்குத் தகுந்தாற்போல் ஒலிபெருக்கியிலிருந்து ஒருபாடலும் ஒலிக்கிறது. வயிறு நிறையப் போட்டுக் கொண்டவர்கள் பாட்டுக்குத் தகுந்தாற்போல் தலைகளை ஆட்டித் தாளமிடுவதையும் பார்க்கிறேன். சாப்பாட்டுக்குமேல் உதடு சிவக்க வெற்றிலையைப்போட்டு அதன் நிறத்தைச் சிலர் ரசித்துக் கொள்கிறார்கள்.

மேலும் கார்களிலும் கால் நடையாகவும் சனங்கள் வந்தபடியே இருக்கிறார்கள். பன்னீர்ச் செம்புடன் சந்தனக் கிண்ணமேந்தி அழகான இளைஞனொருவன் ஆண்களின் நுழைவாயிலிலும் பெண்கள் பகுதியில் இளம் பெண்ணொருத்தியும் வருபவர்களை வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் சாப்பாட்டுக்காக அழைக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். சிலர் சாப்பாட்டுக்கென்றே வந்தவர்கள் போல ஏறுமாறாகச் சாப்பிட்டு விட்டு இக்குழுக்காடுவதைப் பார்க்கிறேன்.

மணக்கோலந்தரித்த குணபாலன் மார்பை நிமிர்த்திக் கொண்டுவந்து தோழனருகே அமர்ந்து கொள்கிறான் புதிதாக வருபவர்களைக் கைகூப்பி வரவேற்றபடியே தோழனோடு இடையில் ஏதோ பேசிக் கொண்கிறான்.

"சரி! சரி! வெளிக்கிடலாம் சாப்பிடாதவை அங்கெ போயச் சாப்பிடலாம் இனிச் சுணங்காதைங்கோ: நாள் நேரம் போய்க் கொண்டிருக்குது......" பெண்வீட்டைச் சேர்ந்த பெரியவரின் குரல் "எல்லாம் சரி; இனி வெளிக்கிடலாம்"! பெண்கள் பகுதிக்குள் தலையை விட்டுக் கூறுகிறார் ஒருவர்

ஒருவர் பின் ஒருவராகச் சென்று கார்களில் ஏறிக் கொள்கிறார்கள் பக்கத்துணைகளுடன் மாப்பிள்ளை ஏறிய கார் முன்னே செல்ல அதைத் தொடர்ந்து மற்றைய கார்களும் தத்தமது ஓசையுடன் புறப்பட்டு மறைகின்றன.

ஒரு பெண் காதலித்தவனை மறந்து மற்றொருவனைக் கைப்பிடித்து விட்டால் கூடியிருந்து நையாண்டி பேசி அவள்மீது குற்றம் சுமத்தி விடத்தயங்காத இந்தச் சமூகம் வயிற்றிலே கருவுடன் தொட்டவளைக் கைவிட்டு விட்டு அவள் நிராதரவான நிலையிலிருக்க மற்றொருத்திக்காக மணவிழாக்கொண்டாடி தாலி கட்டி அழைத்துவரத்துடிக்கும் மனிதப்பண்பற்ற ஒருவனுக்கு வாழ்த்துக்கூறி வழியனுப்பி வைக்கும் காட்சியைக்கண்டு என் போன்ற சிலரின் இதயங்கள் வெந்து வெடித்துக் கொண்டே இருக்கின்றன.

விம்மிப் பொருமிக் கொண்டிருக்கும் இதயத்தின் வேதனையைச் சுமந்த வண்ணம் மொட்டை மாடியை விட்டுக் கீழே இறங்குகிறேன்.

பக்கத்துவீட்டுப் 'பரிமளா' கல்யாண வீட்டில் இருந்து நேராக எங்கள் வீட்டுக்கே வந்திருக்கிறாளென்பதை அவளுடைய ஆடை அணிகளின் மூலம் ஊகித்துக் கொண்டேன்.

"என்ன? பாலு அண்ணை, ஒரே வாட்டமாயிருக்கிறீங்கள்!" வழமையான முறுவலோடு கேட்டாள் "உங்களைப்போலெ எங்களைக் கலியாண வீட்டுச் சாப்பாட்டுக்கு அழைக்கயில்லை, அதுதான் வாட்டமாயிருக்குதென்று பதிலுக்கு நானும் கூறினேன். "நீங்கள் பணக்காரர் சாப்பிடப் போகமாட்டீங்கள் அதாலைதான் அவங்கள் உங்களைக் கூப்பிடயில்லை. நாங்கள் எங்கெ சோறு கிடைக்குதென்டு ஓடிப்போறதுதான்! இல்லையெண்டால் வாயும் வயிறுமாயிருக்கிற ஒருத்தியைத் விட்டிட்டுப் [illegible] ரண்டாந் [illegible] துகளு இப்படிச் செல [illegible] செய்வாங்களோ?' தாய்க்குலத்தின் ஏக்கப் பெருமூச்சு பரிமளாவின் பேச்சில் எதிரொலிப்பதை உணர்கிறேன். 'இப்பிடி ஒரு துரோகத்தைக் கொஞ்சமும் யோசிக்காமல் செய்துபோட்டாங்கள். அந்த வீட்டிலும் பொம்பிளைப்பிள்ளையள் இருக்குதுகள்தானே? ஒரு பொம்பிளையின்ரை நிலைமையைப் பொம்பிளையள்கூட உணரயில்லைத்தானே?

பரிமளாவுக்கிடையே குறுக்கிட்டு 'பொம்பிளையின்ரை தாண்டுதல்தானே இந்த நிலைமைக்கே காரணம். நீயும் நானும் அனுதாபப்பட்டுச் சித்திராவின்ரை பிரச்சினை தீரப்போகுதே! நடக்கிறதுதான் நடக்கும். நீ நட!' என்று சலித்துக்கொள்கிறேன். 'நான் போய் ஒருக்கால் சித்திராவையும் பார்த்துக்கொண்டு வீட்டை போறன்' என்று கூறிக்கொண்டே நடந்தாள் பரிமளா.

சித்திரா! ஆம் பரிமளா கூறிவிட்டுச் செல்லும் அந்தச் சித்திராதான் குணபாலனால் நிர்க்கதியாக விடப்பட்டவள் வயிற்றிலே கருவுடன் அவளைக் கைவிட்டுவிட்டு இன்று மற்றொரு தாரத்துக்காக கோலாகலமாக மணவிழாக் கொண்டாடிக் கொண்டிருக்கிறான்.

எங்கள் தெருவே இன்று மணக்கோலம் பூண்டு நிற்கிறது. சித்திராவின் வீடும் எங்கள் வீடும்தான் இருண்டு போய்க்கிடக்கின்றன. அந்த இருட்டோடுகூடிய தனிமையும் சேர்ந்து எனது இதயத்தின் வேதனையை இரு மடங்காக்குகிறது எனது இதயத்தின் பாரமே கொடூரமாக இருக்கும்போது நேரடியாகப் பாதிக்கப்பட்ட, அதுவும் ஒரு பெண்ணின் உள்ளச் சுமை எப்படிப்பட்டதாக இருக்குமென்பதை உணர்கிறேன்.

'பாலு அண்ணை:' என்று அழைத்தபடியே உள்ளே நுழைகிறாள் பரிமளா.

வல்வெட்டி கி. குணசிங்கம்

'என்ன பரிமளா' என் கண்கள் விரைகின்றன. 'சித்திராவுக்கு நல்ல காய்ச்சல், சித்திராவின்ரை அம்மாவும். சித்திராவும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கண்ணீருத்திக் கொண்டிருக்கினம். நீங்கள் ஒருக்காப் போய் டாக்குத்தரைக் கூட்டிக்கொண்டு வாங்கோ...' பரிமளா கூறி முடித்ததும் நான் மௌனமாகவே இருக்கிறேன். 'ஏன் பாலு அண்ணை பேசாமலிருக்கின்றீங்கள்?' அவளுடைய கேள்வி அவசரமாக இருந்தது.

-பரிமளா, இந்தச் சந்தர்ப்பத்திலே சித்திரா வீட்டுக்கு நான் டொக்டரைக் கூட்டிக் கொண்டு வாறது...' நான் சற்றுத் தயங்கிக்கொள்கிறேன்.

'ஏன், நீங்கள் கூட்டிவந்தாலென்ன?' சரேலெனக் கேட்டாள்.

'நான் வரமாட்டன் பரிமளா, தயவுசெய்து நீ போய்க் கூட்டிவந்துகாட்டி...' நான் கூறிமுடிப்பதற்குள்குறுக்கிட்ட பரிமளா 'நீங்கள் சரியான சுயநலவாதி பாலு அண்ணை' என் இதயத்தின்மீது வேல் கொண்டு குத்தியதுபோலிருந்தது பரிமளாவின் வார்த்தை.

'பரிமளா நீஎன்ரை நிலைமை தெரியாமல் கதைக்கிறாய்' 'சித்திராவின்ரை நிலைமை தெரியாமல் நீங்கள் கதைக்கிறீங்கள். தயவுசெய்து போட்டு வாங்கோ' என்னை இடைமறித்த பரிமளா, சித்திரா [illegible]

'போறேன் பரிமளா! இப்பவே போய் நான் டாக்குத்தரைக் கூட்டிக்கொண்டு வாறேன், நீ போய்ச் சித்திராவுக்குப் பக்கத்திலை இருந்து கொள்' நான் அவசர அவசரமாகப் புறப்படுகிறேன் 'ஊருக்கும் உலகத்துக்கும் காதுகுடுக்கக்கூடாது. அவை எல்லாப் பாட்டுக்கும்கதைப்பினம். ஏன்? இப்ப சித்திராவுக்கொரு மாப்பிள்ளை வந்திட்டால் சித்திராவை எல்லாரும் தள்ளிவைத்திடுவினமோ? அல்லது சித்திரா இப்பிடியே இருக்கச் சீவியத்துக்குக் குடுப்பினமோ? பரிமளா எனது உள்ளத்தைப் புரிந்து கொண்டுதானிருக்கிறாளென்பதை அவள் ஆத்திரத்தால் கக்கும்வார்த்தைகள் புலப்படுத்துகின்றன. நான் புறப்படுகிறேன்.

பத்து நிமிடங்களில் நான் டொக்டரை அழைத்துக் கொண்டு சித்திரா வீட்டுக்கு வந்துவிடுகிறேன். டொக்டர் சித்திராவைப் பார்வையிடுகிறார். சுடுதண்ணீர் கொண்டு வரும்படி டொக்டர் கேட்டதும், பரிமளா சுடுதண்ணீரைக் கொண்டுவந்து கொடுக்கிறாள். ஊசிமூலம் மருந்து கொடுக்கப்படுகிறது. மற்றும் நேரங்களுக்குரிய மருந்துகளைப் பரிமளாவிடம்கொடுத்துபாவிக்கும் முறைகளையும் கூறிவிட்டுப் புறப்படுகிறார் டொக்டர்.

பரிமளா டொக்டருக்குப் பணம் கொடுப்பாளென்று நான் எதிர்பார்க்கவில்லை. பரிமளா கொடுத்த பணத்தை வாங்கி சட்டைப் பைக்குள் போட்டபடியே வெளியேறுகிறார் டொக்டர். நான் அவரை வழியனுப்பி விட்டுத் திரும்பவும் வருகிறேன்.

உடனே வந்துவிடுவதாகக் கூறி வீட்டுக்குச் சென்றுவிடுகிறாள் பரிமளா. இப்பொழுது மூன்று ஜீவன்களும் வாய்மூடி மௌனம் சாதிக்கின்றன. கொம்பிழந்த கொடியைப் போல் துவண்டுபோய்க் கிடக்கும் சித்திராவின் முகத்தை இடையிடையே நோக்குகிறேன். நிலவு தோற்கும் விழிகளுடன், மலர்கள் தோற்கும் குழுமையுடன் அவள் துள்ளித்திரிந்த அந்தப் பருவத்தை நினைத்துப் பார்க்கிறேன்.

சித்திராவின் கடைக்கண் வீச்சுக்காகத் தவம் கிடக்காத வாலிபர்களே இந்த வட்டாரத்தில் இல்லையெனலாம். அவளுடைய அழகுக்கு நிகர் அவள்தானென்பதை இந்த வட்டாரத்திலுள்ள எவருமே மறுக்கமாட்டார்கள். வீரமிகு ஆடவனும் அவளுடைய அழகின் முன்னால் கோழையாகிப் பணிந்து நிற்பான். பணம் மிகுந்த தனவந்தரும் ஏழையாகிக் கையேந்துவர்.

எங்கள் வட்டாரத்தில் உள்ள புள்ளிக்காரரில் குணபாலனும் ஒருவன் இவனும் சித்திராவின் அழகில் மயங்கி, அவளுடைய காதலுக்காகத் தவம் கிடந்து தோல்வியுற்ற பின்னர், முறைப்படி பெண் கேட்டு அவளைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டான்

குணபாலன் சித்திரா வீட்டில் தங்கியிருந்து குடும்பம் நடத்தியதை எங்கள் ஊரே அறியும். ஆனால்... யாரும் தட்டிக் கேட்கத் துணியாத அளவுக்குத் தகுதி படைத்திருந்தான் குணபாலன். இருந்தும் பாதிக்கப்பட்டிருக்கும் சித்திரா எனது உடன் பிறந்த தங்கையாக இருந்திருந்தால் அவனைத் தட்டிக் கேட்கும் துணிவு என்னிடம் இருந்திருக்கும் சித்திரா என் தங்கையாக இல்லாதபோதும் அவள்மீது எனக்கு அக்கறை உண்டு சித்திராவுக்காகப் பரிந்து பேசத் துடிக்கிறேன். ஆனால் அப்படிப் பேச முடியாத நிலைக்கு என்னைத் தள்ளிவிட்டான் குணபாலன்.

உடலில் களைமட்டுமல்ல உள்ளத்திலே சுமையையும் தாங்கியபடி உணவு உறக்கமின்றி சுருண்டு படுத்திருக்கும் சித்திராவின் மீது என் பார்வையைச் செலுத்துகிறேன். சித்திராவின் தாய் அவளைத் தொட்டுப் பார்த்தபடி ஏதோ கேட்கிறாள் வேண்டாம் என்ற பாவனையில் தலையை ஆட்டுகிறாள் சித்திரா.

"எப்படி? காய்ச்சல் குறைஞ்சிருக்கே!" என்று கேட்டபடியே உள்ளே நுழைந்த பரிமளா சித்திராவைத் தொட்டுப் பார்த்துவிட்டு 'இப்ப நல்லாக் குறைஞ்சு போச்சுப் பாலு அண்ணை" பரிமளாவின் குரல் மகிழ்ச்சியுடன் ஒலிக்கிறது. நான் மௌனமாகவே இருக்கிறேன். "காய்ச்சல் குறைஞ்சால் இனி இரவுக்குத்தான் மருந்து குடிக்கச் சொன்னவர்; இப்ப கோப்பி குடிப்பம்" என்றபடி குசினிக்குள்ளே நுழைந்த பரிமளா கோப்பியுடன் வருகிறாள். சித்திரா மெதுவாக எழுந்திருக்க முயன்ற போது தன் கைகளால் தாங்கி அவளுக்கு உதவுகிறாள் சித்திராவின் தாய்.

நாதஸ்வர ஓசையுடன் மேளத்தின் ஒலியும் சேர்ந்து என் செவிப்புலனை ஈர்த்துக் கொள்கிறது. பெண் வீட்டில் திருமணம் முடிந்து மாப்பிள்ளையும் பெண்ணும் பக்கத்துணைகளுடன் ஊர்வலமாக வருவதைப் புரிந்து கொள்கிறேன்.

தொட்டுப் பழகியவள் இங்கே தட்டுத்தடுமாறிக் கிடக்கிறாள். அவளை விட்டுப் பிரிந்தவன் அங்கே மற்றொருத்திக்குத் தாலிகட்டி அழைத்துவருகிறான். என்ன! விசித்திரமான உலகம்!...பட்டுடுத்துப் பூமாலை வைத்துக் குங்குமத் திலகமிட்டுக் குலமகளாக வீற்றிருக்கலாமென்று கனவுகண்டிருப்பாள் சித்திரா. ஆனால் இன்று அவளுடைய ஆசைகளெல்லாம் மின்னலாகி விட்டதே!

சித்திரா ஒரு குற்றமும் செய்யாமல் குணபாலன் அவளைக் கைவிட்டானு!... என்று யாரும் கேட்கலாம்!

சித்திரா ஒரே மகள்தான்! தந்தை இறந்துவிட்டார். தாயும் மகளும் தனி வீட்டில் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு ஆண் துணை ஒன்றும் சொந்தத்தில் இல்லை. சித்திராவைக் குணபாலன் பதிவுத் திருமணம் செய்துகொண்ட பின்னரும், ஊரை அழைத்துத் தாலி கட்டும்வரை வீட்டு நிர்வாகத்தையோ, வீட்டுச் செலவையோ குணபாலனிடம் விடுவது சரியல்ல என்பதால், சித்திராவின் தாய்தான் அவற்றைக் கவனித்து வந்தாள். தேவைப்படும் நேரங்களில் உதவிக்காக என்னை அழைப்பதுண்டு.

அதிலிருந்து நான் அவர்களுடன்நெருங்கிப் பழகிக்கொள்ள நேர்ந்தது. நாங்கள் அப்படிப் பழகிக்கொள்வதை சந்தேகக் கண்ணோடு பார்த்த குணபாலனின் வீட்டார் சித்திராவை என்னுடன் இணைத்துக் கதை கட்டினார்கள்.

குணபாலன் வீட்டாருக்கு ஏற்கனவே சித்திராவின் சம்பந்தம் விருப்பமில்லை. தங்களைப் போலவே பெரும் புள்ளிக்கார இடத்தில் சம்பந்தத்தை எதிர்பார்த்தார்கள் அவர்கள். ஆனால் குணபாலன் சித்திராவின் அழகில் மயங்கி, அவளைத்தான் வேண்டுமென்று பிடிவாதமாக நின்றபடியால் சித்திராவுக்கும் அவனுக்கும் பதிவுத்திருமணம் செய்ய ஒப்புக்கொண்டார்கள். அப்படிப் பட்டவர்களின் பேச்சை நம்பிக்கொண்டு கள்ளங்கபடமற்ற ஓர் உள்ளத்தைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டான் குணபாலன்.

தனது உறவினால் அவள் வயிற்றில் உருவான கருவைக்

(9-ம் பக்கம் பார்க்க)

## வாசகர் நெஞ்சம்

அண்மையில் வாரமலரில் ஹோமியோபதி வைத்தியமுறை தத்துவத்தை எமக்கு தந்தது நன்றாகவிருந்தது, இலவுகாத்த கிளியைபற்றி நான்நல்லது என்று சொல்லாமலே தெரியும். குடாநாட்டு மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வழிதந்தீர்கள்...

காளையரே வாரீர் அழைப்பே அழைப்புத் தான் உன்னொளியினால் உந்தப்பட்டவர்கள் கலைஞரா? நன்றி விளக்கத்திற்கு.

பல் வைத்தியத் தொடர் கட்டுரை நிச்சயம் ஈழநாடு வாசகர்களுக்கு பயன்தரும்.

மற்றது, நல்ல சரக்குள்ள பகுதி மாணவர் எண்ணம். நல்ல விஷயம் வருகிறது. மூடிந்துபோன கொரில்லா அரக்கன் கதை நிச்சயம் சிறுவர்கள் மனதில் ஒரு இடம் பிடித்திருக்கும். கதையிலிருந்து கதாசிரியர் நிச்சயம் நல்ல சிறுவர்களுக்கான எழுத்தாளர் என்பது தெரிகிறது. எனது பிள்ளைகள் விரும்பிப் படித்தனர். இவர் பல விஷயங்கள் எழுதிவருவது தெரிந்ததே

உயிர்ப்பு ஞாயிறன்று இருளகற்றியபேரொளி தந்தீர்கள் இப்பணி தொடரட்டும்... மினிரட்டும் ஈழம். இன்னொன்று ஈழத்து சினிமா வளர்ச்சியை மனதில் வைத்து ஈழத்து சினிமாச் செய்திகளை யாவது தாருங்களேன்...?

சி. இராஜரத்தினம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் சூருவளி நிவாரணப் பணிகள்!

## பாதிக்கப்பட்டோர் பயன் அடைந்துள்ளனரா?

(மட்டக்களப்புப் பிரதேசத்தில் சூருவளி ஏற்படுத்திய அழிவுகளினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட அளவு நிவாரணம் கிடைத்துள்ளதா? அங்குள்ள நிலைமையை விளக்கும்வகையில் சில கேள்விகளை எழுப்பியுள்ளார் மட்டக்களப்பு அங்கிள் வீதியைச் சேர்ந்த திரு. கே. கணபதிப்பிள்ளை.

'ட்ரிபியூன்' பெப்ரவரி 16 ம் திகதி இதழில் வெளியான கட்டுரையின் சுருக்கம் இது.)

மட்டக்களப்புப் பிரதேசத்தை சூருவளி தாக்கி நாசம் புரிந்து ஓராண்டுக்கு மேல் கழிந்துவிட்டது. ஆனுல் இன்னமும் அதன் தடயங்களும், தழும்புகளும் அப்படியேதான் இருக்கின்றன.

பொதுமேடைகளில் இருந்து அனுதாபக் குரல்கள் அபரிமிதமாக எழுப்பப்பட்டன. அதினுல் ஏற்பட்ட கஷ்டங்களை நீக்குவதற்கான பல்வேறுவிதமான யோசனைகள் தெரிவிக்கப்பட்டன. அமைச்சர்களும், அதிகாரிகளும் பல மாநாடுகளை நடத்தி ஆராய்ந்து திட்டங்கள் தீட்டப்பட்டன. ஏராளமான வாக்குறுதிகளும் அளிக்கப்பட்டன.

ஆனுல் பாதிக்கப்பட்ட மக்களோ எப்போதும் போலவே உணவு இல்லை, நல்ல வசிப்பிடமில்லை, ஒழுங்கான பாடசாலை இல்லை பயன்படுத்தக்கூடிய உடுபுடவையில்லை, கைத்தொழில், விவசாயம், மீன்பிடித்தல் போன்ற தொழில்களை நடத்த வசதியில்லை என்றவாறு பழைய பல்லவியையே இன்னமும் பாடிக்கொண்டிருக்கிருர்கள்.

சூருவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான புனர்நிர்மாணத்திட்டத்துக்கு என்ன நேர்ந்துவிட்டது? இது எந்தளவுக்கு முறையாகத் தயாரிக்கப்பட்டது? இன்னும் எவ்வளவு எஞ்சியுள்ளது? இதை முழுதாகச் செய்து முடிக்க இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கும்?

சூருவளியால் மோசமாகத் தாக்கப்பட்டு, அங்கேயே வாழுகின்ற ஒரு பிரஜைக்கு மேற்கண்டவாறு கேள்வி எழுப்புவதற்கு உரிமையுண்டு.

தனது சொந்த நலனுக்காகவும், தான் சட்டத்திற்குப் பணிந்து வாழும் நாட்டின் நலன் குறித்தும் இந்தக் கேள்விகளை எழுப்புதற்கு அவனுக்குரிமையுண்டு. அவ்வாறு அவன் கேட்கக்கூடிய கேள்வி பின்வருமாறு அமையும்.

(1) சூருவளி அழிவுகள் தொடர்பான புனருத்தாரணத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட உதவிகள் யாவை வெளிநாட்டிலும், இலங்கையிலும் இருந்து இவ்வாறு உதவிகள் எந்தவகையில் வழங்கப்பட்டன?

(2) ஜனுதிபதி நிதியிலிருந்து எவ்வளவு வழங்கப்பட்டது?

(3) அரசு வழங்கியது எவ்வளவு?

(4) சூருவளி ஏற்பட்ட உடனேயே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிபுரிவதற்கு முன்வந்த திணைக்களங்கள்- அல்லது அதிகாரிகள் யார்?

(5) இந்தச் சுயநலமற்ற சேவை புரிந்த இவர்கள் பகிரங்கமாகப் பாராட்டப்பட்டார்களா?

(6) சூருவளி பாதிப்பு நிவாரணப் பணிக்கான திட்டம் தான் என்ன?

(7) நாசமான குடியிருப்புக்கள் திருத்தியமைக்கப்பட்டனவா?

(8) அவ்வாருயின் எத்தனை, செலவுத்தொகை என்ன? யார் செய்தது?

(9) எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டுள்ளது? பாதிக்கப்பட்ட பல்வேறு இடங்களுக்கும் எவ்வளவு உதவித் தொகை ஒதுக்கப்பட்டது?

(10) சூருவளியால் பாதிக்கப்படாத கட்டிடம் எதுவும் நிர்மாணிக்கப்பட்டதா? எங்கே யார் செலவில்?

(11) வீழ்ந்து கிடக்கும் தென்னை மற்றும் மரங்களைப் பயன்படுத்தும் விதத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

(12) இந்த மரங்களில் எவ்வளவு கன அடிகளை வெட்டி அறுத்து அரசு மரக்கூட்டுத்தாபனம் எடுத்துக்கொண்டது? எவ்வளவு பெறுமதியான மரங்கள் இந்த மாவட்டத்துக்கு அப்பால் எடுத்துச்செல்லப்பட்டது?

(13) அழிக்கப்பட்ட காட்டுப் பகுதியில் விரைவில் வளரும் பயனுள்ள மரங்களை நாட்டுவதற்கு ஏதும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

(14) மரங்கள் நாட்டி மீண்டும் பசுமைக் காட்சியை ஏற்படுத்திக் கொள்ளும் விதத்தில் மக்கள் ஊக்கப்படுத்தப்பட்டார்களா?

(15) எத்தனை ஏக்கர் தென்னங் காணி நாசமாக்கப்பட்டது? எத்தனை மரங்கள் வேரோடு வீழ்த்தப்பட்டன. (16) தென்னை பயிர்டுபவர்களுக்கு எந்த அளவில் உதவி அளிக்கப்பட்டது? (17) எத்தனை ஏக்கர் நிலம் ஏற்கனவே பயிரிடப்பட்டுள்ளது? எத்தனை கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன? (18) சூருவளிக்குப் பின்னர் ஒவ்வொரு விவசாயப் போகத்தின் போதும் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு? (19) நட்டத்தின் அளவு என்ன? (20) அளித்த உதவி என்ன? (21) எந்தப் பிரதேசத்திற்கு? (22) இப்போதைய நிலைமை என்ன? (23) பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு அரிசி, தேங்காய், மண்ணெண்ணெய் கருவாடு, பருப்புப் போன்றவற்றை நியாய விலையில் வழங்க அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? (24) சூருவளிக்கு முன் இப்பிரதேசத்தில் கால் நடைகளின் எண்ணிக்கை என்ன? (25) சூருவளிக்குப் பின்னர்? (26) கால்நடைச் சொந்தக்காரர்களுக்கு ஏற்பட்ட நட்டம் என்ன? (27) இவர்களின் புனர் வாழ்விற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டது? (28) இப்பிரதேச கடற்ருெழிலாளருக்கு ஏற்பட்ட நட்டம் என்ன? (29) இந்த இழப்பின் அளவு என்ன? (30) இந்தத் தொழிலைப் புனருத்தாரணம் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? (31) எத்தனை கள் இறக்கும் தொழிலாளர் இதனுல் பாதிக்கப்பட்டனர்? (32) இவர்களுக்கு மாற்றுத் தொழில் வாய்ப்புக்கு வழி செய்யப்பட்டதா? (33) கைத்தறி நெசவு சாலைக்கோ அச்சுத் தொழில், பாய்முடைதல், கூடை பின்னல், செப்பு, மட்பாண்டம், கண்ணும்பு, தச்சு, கிடுகுபின்னல், கயிறு திரித்தல், வலை பின்னல், மரக்கறி-பழச் செய்கை, தையல், போன்ற இன்னேரன்ன தொழில்கள் எந்த அளவில் பாதிக்கப்பட்டன, அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்காக என்ன நிவாரணம் அளிக்கப்பட்டது? (34) பழுதடைந்த தமது வீடுகளை தமது சொந்த சேமிப்புக்கள், கடன்கள் போன்றவற்றைக் கொண்டு திருத்திக் கொண்டுள்ள மத்தியதர வகுப்பினருக்கு அரசு என்னென்ன நிவாரணம் செய்துள்ளது? (35) நகர புனரமைப்புத் திட்டத்திற்கும் - மட்டக்களப்பு நகரை புதுப்பித்து சட்டியெழுப்பும் திட்டத்திற்கும் என்ன நேர்ந்தது? (36) இதில் ஏற்படும் தாமதம் என்ன? (37) பழுதடைந்த மட்டக்களப்பு நகரை புனரமைப்பதற்காக உறுதியளிக்கப்பட்ட 20 லட்சம் ரூபாயும் மாநகர சபைக்கு ஏன் கொடுக்கப்படவில்லை?

மட்டக்களப்பில் வாழும் பொது மனிதன் யாரிடம் போவது, யாரிடம் உதவி பெறுவது, எதைப் பெறுவது, எங்கே போவது என்று புரியாத நிலையில் தவிக்கிருன்.

மேலே காட்டிய கேள்விகளுக்கு பதில் கண்டு பிடிப்பதும் அவைகளைத் தாமதமின்றி நிவர்த்திக்க வழி செய்வதும் மக்கள் தலைவர்களதும், பிரதிநிதிகளதும், அரசாங்கத்தினதும் கடமையாகும்.

### காசியம்பதிக் காட்சி

கங்கைக்கரையோரம்- காலைமாலை நேரம் காணும் கண்கொள்ளாக்காட்சி. வியாசகாசி முதல் மணிகர்ணி நதிக்கரையில் சுமார் 2000 வளைங்களில். மக்கள் கங்கை நங்கை மேல் ஓடியவாறு கரையோரத் தலங்களையும், மாடமாளிகைக் கோபுரங்களையும் பார்த்த வண்ணமிருப்பார்கள்.

அரிசந்திர மயானத்திலும் மணிகர்ணி மயானத்திலும் பிரேதங்களெரிந்தபடியேயிருக்கும். காக்கை, பருந்து, புருப்புட்கள் சுற்றியே திரியும். படங்களையெடுப்போரும் படகோடி விளையாடுவோரும் நிறைய உண்டு.

கங்கையின் புனித புண்ணிய நீருக்கு எதுவும் கழிவில்லை. எதையும் தாங்கிச் சுத்திகரிக்கும் புண்ணிய நதி கங்கை.

காசியில் இறக்கவேண்டி ஜீவிப்பவர் அநேகர். தரிசித்து வழிபடவருவோர் ஒருபுறம். அநாதைகள், யாசகர்கள், சன்யாசிகள் முதலியோர் எல்லா மடங்களிலும் எப்படியும் உண்டு உறங்கி வாழ்கின்ருர்கள்.

இந்திய உத்தரப் பிரதேசத்தின் சனப் பெருக்கமான நகர் வாரணு (காசி). பெருந்தொகையான ஸ்தாபனங்களும் கடைவீதியும் மக்கள் நெருக்கமாகவே என்றும் உண்டு.

கால்நடைகள் எல்லா வீதிகளிலும் மக்களோடு திரியும். பால், தயிருக்குப் பஞ்சமேயில்லை. இங்கு மலர் மணப்பதில்லை. பல்லி சொல்வதில்லை. இது வைரவசுவாமி, அநுமார் மூலம் அளித்த ஆணை. விசாலாட்சி விசுவநாதருக்கு இரவு 12 மணிக்கு மணிகர்ணி மயானத்தில் எரியும் சுடலைச் சாம்பலும் கங்கை நீரினுலும் நடைபெறும் அபிஷேகம் மிக அற்புதமானது. (இது நகரத்து செட்டிமார் உபயம்)

(காசியிலிருந்து கு. வி. மகாலிங்கம் எழுதியது)

### ஒலிம்பிக்ஸ்- 80

# ஒரு மாற்றுப் போட்டி சாத்தியமா?

ஒலிம்பிக் விளையாட்டு சர்வதேச ரீதியில் சர்ச்சைக்குரிய விவகாரமாக மாறியுள்ளது. மூன்று மாதங்களுக்கு முன்னர் ஆப்கானில்தான் நெருக்கடியைத் தொடர்ந்து இப்பிரச்னை தோன்றியது.

இவ்வாண்டு ஒலிம்பிக் போட்டியைப் பகிஷ்கரிக்க வேண்டும் - வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் - ஒத்தி வைக்க வேண்டும் என்று இப்பிரச்னை தொடர்பாகக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

உலக நாடுகள் மத்தியில் நல்லுறவையும் பரஸ்பர புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் வழிகளை விரல்விட்டு எண்ணலாம். அவற்றுள் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி மிகப் பிரதான இடத்தை வகிக்கின்றது. இதர மகாநாடுகளில் ஏன் ஐ. நா. வில் கூட சொற்போர், வெளிநடப்பு, பகிஷ்கரிப்பு என்று தமக்குள் இருக்கும் பகைமையை வளர்க்கும் நாடுகள், ஒலிம்பிக் அரங்கில் பெரிது, சிறிது என்ற பேதமின்றி சமத்துவமான உரிமைகளினடிப்படையில் மனித சாதனையில் கொடுமுடியைத் தொட்டு விடுவதற்காகப் போட்டியிடவும் ஆரவாரித்து மகிழவும் மனிதனுக்குக் கிடைத்துள்ள வாய்ப்பு மகத்தானதே.

அரசியல் காரணங்களுக்காக இத்தகைய வாய்ப்புக்கள் பறிக்கப்படுவதை நாகரீகம் அடைந்த உலகின் செயலாகக் கருத முடியாது. ஒலிம்பிக் இயக்கத்தில் அரசாங்கம் தலையிட முடியாதென்பது ஒலிம்பிக் சாசனத்தின் விதிகளில் ஒன்று.

ஆர். குலசேகரம்

அரசியல் தவறுகள் எப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டே வருகின்றன. அவற்றுக்காக நல்லவைகளை நிராகரிப்பதை எவரும் ஏற்றுக் கொள்வதில்லை. ஒலிம்பிக்கைப் பகிஷ்கரிப்பது, அல்லது இடம் மாற்றுவதன் மூலம் அரசியல் பிரச்னைக்கு முடிவான தீர்வு கிடைத்து விடுமா?

மாஸ்கோ ஒலிம்பிக்ஸைப் பகிஷ்கரித்து, அதற்குப் பதிலாக ஒரு மாற்று விளையாட்டுப் போட்டியை நடாத்துவது பற்றி ஆலோசிக்க மேற்கு நாடுகள் சில, அண்மையில் ஜெனிவாவில் கூடின. அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா போன்றவை இதில் கலந்து கொண்ட முக்கிய நாடுகள். மேற்கு ஜெர்மனியும், பிரான்ஸும், இத்தாலியும் இதில் கலந்து கொள்ளவில்லை.

ஐரோப்பிய ஒலிம்பிக் கமிட்டிகளது மகாநாடு எனக் கூறப்பட்ட இந்த ஜெனிவா மகாநாட்டின் ஆரம்பமே ஐரோப்பாவின் பிரதான நாடுகளான மேற்கு ஜெர்மனியும், பிரான்ஸும், இத்தாலியும் கலந்து கொள்ளாததால் பிசுபிசுத்துவிட்டது.

ஒலிம்பிக் கமிட்டிகள் மீது அரசியல் நிர்ப்பந்தம் கொண்டு வருவதே ஜெனிவா மகாநாட்டின் நோக்கமாக இருந்த போதிலும் இரண்டு நாள் விவாதத்தின் பின்னர் இம் மகாநாட்டின் பிரதிநிதிகள் ஒரு விஷயத்தை மட்டும் கடைசியில் ஒத்துக் கொண்டனர். அது, மாஸ்கோ ஒலிம்பிக்குக்கு மாற்ருக ஒரு போட்டியை நடத்த முடியாது என்பது தான். காரணம் உலகில் இருப்பது ஒரு ஒலிம்பிக் இயக்கமே.

ஒலிம்பிக் பகிஷ்கரிப்புப் பிரசாரத்தில் முன்னிற்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடிவை பிரிட்டனின் தேசிய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் சேர் டெனிஸ் ஃபலோ நிராகரித்துவிட்டார். பிரிட்டிஷ் ஒலிம்பிக் வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளத் துடிக்கிருர்கள். அரசியலுக்குப் பலியாக அவர்கள் தயாராக இல்லை.

ஒலிம்பிக் பகிஷ்கரிப்புக்கு முதன் முதலில் குரல் கொடுத்த அமெரிக்காவே, அரசியலையும் விளையாட்டையும் கலக்கக் கூடாது என்பதை ஒத்துக் கொண்டுள்ளது. ஆயின், கெடுபிடி யுத்தம் போன்று ஒலிம்பிக் பகிஷ்கரிப்பு இயக்கத்தை அமெரிக்கா மும்முரமாக நடத்துவது ஏனே?

### பிளவுபடுத்தும் நடவடிக்கை?

அமெரிக்காவை ஆதரித்து வரும் மேற்கு ஜெர்மனி கூட ஒலிம்பிக் விவகாரத்தில் அமெரிக்காவுடன் ஒத்துப் போவதாக இல்லை ஜனுதிபதி காட்டரது ஆலோசகர் இத விஷயமாக மேற்கு ஐரோப்

[9ம் பக்கம் பார்க்க]

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், போன்: 7199.

தந்தி: வைரம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சித்திரைப்பாவை

-வாகரை வாணன்

கலைமகள் வந்தனள் கண்ணசை செய்தனள்
அலையெழுந்தாடினள் அருவிப் பெண்பாடினள்
கல கல வென்றுமே காற்றொலி செய்திடும்
மலர் எனும் யாழினில் மது வண்டு மீட்டிடும்!

குயிலினம் பாடின கூவிடும் புறுக்களே
ஒயிலாரத் தத்தைகள் ஒசிந்துமே நடந்தன
மயிலினம் வந்தன மணிநடம் செய்தன
இயல், இசை, நாடகம் எழிலுற நடந்ததே!

தென்றலது உராய்ந்து தேய்ந்த இடை மாதர்
மன்றமது இருந்தனர், மாலை போலானர்,
கொன்றையது மலரும் கொங்கைத்
தேன் குடங்கள்
நின்றபடி நிற்கும் நெஞ்செல்லாம் ஈர்க்கும்!

இடையே இல்லை இதழ்கள் பவளம்
குடையோ கண்கள்? கொழிக்கும் அழகு
தொடைகள் பட்டு தோற்றம் அபூர்வம்
நடைகள் பின்னும் நளினப் பெண்கள்!

ஆண்மைக் குலங்கள் ஆண்கள் கூட்டம்
காணுந் தோற்றம் களிறுகள் போல
மானம், ஞானம் மனதில் வீரம்
பூணும் வர்க்கம் புருஷ லட்சணம்!

வழுக்கும் மேனி வளரும் பயிர்கள்
அழுக்குப் புரளும் ஆசை முகங்கள்
ஒழுக்கும் வாய்கள் ஒள்ளுப்பம் கைகள்
கொழுந்துக் கால்கள் குளிர்ந்த பாதம்!

துரு துரு பார்வை தும்பைப் பூக்கள்
பருவப் பிஞ்சு பளிங்குக் கன்னம்
கரும்புப் பேச்சு கதலி இதழ்கள்
விரும்பும் வயது விளையாட் டெண்ணம்

நடந்து திரிவர் நாற்புற மெங்கும்
இடங்கள், சூழல் எல்லாம் மறந்து
கிடந்து புரள்வர் கேட்பார் இல்லை
குடும்ப விளக்காம் குழந்தைச் செல்வம்!

வரவேற் பெங்கும் வாழ்த்தொலி முழக்கம்!
திரண்டனர் மக்கள் திரைகடல் போல
மருண்டது உலகம் மயங்கினர் தேவர்
புரண்டன மாலை பூவையின் மார்பில்!

தேவி நீ வந்தாய் திருமகளே வந்தாய்
ஆவி நீ வந்தாய் அமுதே நீ வந்தாய்
ஓவியம் வந்தாய் ஒய்யாரி வந்தாய்
தாவி நான் குதிப்பேன்
தணலையும் விழுங்குவேன்!

வேண்டுகோள் தாயே
விழாவினில் வைத்தேன்
தூண்டுகோல் இல்லை துணிந்து நான் வந்தேன்
ஆண்டருள் செய்க, அம்மை நீகேட்பாய்
தூண்டினிற் புழுப் போல்
துடிக்குமென் நெஞ்சம்!

எல்லார்க்கும் பொதுவாய்
எல்லாம் நீ வைப்பாம்
செல்வர்கள் என்றோர் சிறுகும்பல் வேண்டாம்
கள்ளர்கள் பெருகக் காரணம் என்ன?
உள்ளதைச் சொல்வேன்
உணர்ந்திட வேண்டும்!

உழைக்க ஓர் கூட்டம் உறிஞ்ச ஓர் கூட்டம்
விளைக்க ஓர் கூட்டம் வெட்ட ஓர் கூட்டம்
தழைக்க ஓர் கூட்டம் தறிக்க ஓர் கூட்டம்
பிழைக்குமா தர்மம் பெருமாட்டி சொல்லு!

மலையினைத் தகர்த்து மடுவிலே போடு
நிலத்தினைச் சமனாய் நீ செய்யவேண்டும்
மலைக்க நீ வேண்டாம் மனங்கொள் நடக்கும்!
நிலமையில் மாற்றம் நிச்சயம் வேண்டும்!

கடவுளவன் பேரில் கட்சியதன் பேரில்
நடைமுறை சாத்திரம் நாட்டினதன் பேரில்
தடையின்றிச் சொத்து
தான் சேர்த்து வாழும்
கொடியவர் அறவே கொலைவாள் எடு நீ!

வறிஞர், செல்வர் வார்த்தைகளிரண்டும்
அறிஞர் செய்த அகராதியிருந்து
எறிந்திட வேண்டும் இகழ்ந்திட வேண்டும்
தெரிந்தவர் உடனே மறந்திட வேண்டும்

(தொடரும்)

## இந்திய நாட்டில் கலையும் யோகசாதனையும்-3

# உயர்ந்த உண்மையைப் பிரதிபலிப்பதே உன்னத கலையாகும்!

**உன்னதமான கலை என்பது உயர்ந்த உண்மையைப் பிரதிபலிப்பதேயாகும். அஃது இந்தியக் கலையின் அடிப்படைக் கோட்பாடாக அமைந்துள்ளது.**

**மனிதர்கள் என்ன கனுக்களைக் காண்கின்றனரோ அவை தான் உண்மை உடையவை; அவர் ஆற்றும் செயல்கள் அன்று; எண்ணமே செயலிலும் பார்க்க எல்லையில்லாச் சிறப்பு வாய்ந்தது.**

ஆங்கில மூலம்:
கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி
தமிழாக்கம்:
வரலாற்றுவாணர்
வை. முத்துக்குமாரசுவாமி

கலைகளும் செயற்பாடுகளும் பிளேற்றோ என்னும் தத்துவஞானி பாவனைக் கலையைப்பற்றி (Imitative art) நிழல்களின் நிழலினைப் பற்றிக் கற்பிதம் செய்துள்ளார். ஆயினும் யூகத்தின் துணைக் கொண்டு ஊடுருவி நேர்முகமாய் ஒரு கலைஞன் மாட்சியை நிறைந்த உறுதிப் பொருள்களை உய்த்துணர முடியும் என்பதை அவர் எண்ணமுடியவில்லை. எனினும் அவர் காலத்துக் கிரேக்க கலை சமயச்சார்பு உடையதல்ல என்பதையும் அது ஆழமான மெய்யுணர்வு உடையதல்ல என்பதையும் அவர் நன்கு உணர்ந்திருந்தார். கிரேக்கக்கலையில் (பண்டைய உருவக் கலையில்) ஞான திருஷ்டிவினோதம் எள்ளளவும் கிடையாது. ஒருவேளை அவ்வாறு அத்தகைய வினோதம் பொலிந்துள்ள கலையாக விளங்கியிருந்தால் அதில் அவ நம்பிக்கை கொண்டிருப்பார் என்று யோசிக்கலாம். ஏனெனில் எகிப்து இந்தியா மத்திய கால ஐரோப்பா முதலிய நாடுகளில் அந்நாளில் நிலவிய ஆத்மீகத் தொடர்புள்ள கலையைப் பற்றிப் பிளேற்றோ தமது எழுத்துக்களில் விபரங்களைத் தெரிவித்தாரில்லை.

### உன்னதமான கலை என்பது எது?

உன்னதமான கலை என்பது உயர்ந்த உண்மையைப் பிரதிபலிப்பதேயாகும். அஃது இந்தியக்கலையின் அடிப்படைக் கோட்பாடாக அமைந்துள்ளது. இந்த அளவு கோல் ஒன்று மட்டுமே கொண்டு நாம் இந்தியக்கலையை எடைபோடவோ மதிப்பிடவோ விளங்கவோ கூடும்.

இந்துசமயம் என்ற நாகரீக தத்துவம் பரப்பும் மாபெரும் சக்தியானது, மண்ணுலக வாழ்விலே விண்ணுலக வாழ்வை அடைவதற்கு ஏதுவான முயற்சியின் நேர்வழியேயாகும். சமயக்கலை பாரம்பரியங்களுக்கும் இந்திய இசைகட்டிடக்கலை சடங்குகள் முதலியவற்றிற்கும் அர்த்த புஷ்டியான விளக்கம் இதுதான் அனுபவத்தின் வாயிலாகவும் நிலையான உண்மைகளை நேரில் கண்டும் கேட்டும் உணர்த்த விழுமியோர் [மேலோர்) குறைந்த சக்தி உள்ளவர்களுக்குத் தெரிவித்து அவர் மறக்க ஒண்ணாது திடசித்தம் (மனஉறுதி) பண்ணினர்.

கலை அல்லது வாழ்க்கையைப்பற்றி நாம் எமது சொந்தக் கற்பனை விகற்பங்களைப் பின்பற்றுதல் தகாது. பின்னையவை தான் எம்மைத் திருப்தி யடையச் செய்வதாயிருந்தாலும் தகாதவை. அவற்றைக் குருட்டுத்தனமாகப் பின் பற்றுதல் [illegible] மனப்பரிபக்குவ நிலையைச் சேர்ப்படுத்தி அதன் வாயிலாக உறுதிப் பொருள்களின் உண்மைகளை நாமேகண்டு, கேட்டு உய்த்துணர்ந்து இன்று பரந்திருக்கும் மனிதனின் உணர்வு நிலைகளுக்கு - உகந்தவகையில் கலைகளைப் படைக்கக் கூடிய வர்களாக எம்மை ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

ஓர் இந்தியக் கலைஞன் காணுதற்கரிய பொருள்களை காணுதற்கு எளிய பொருட்களைக் காட்டிலும் உண்மை உருவத்தத்துவம் நிறைந்த வகையாகச் சித்தரிப்பதில் தனது முழுக் கவனத்தையும் செலுத்துகின்றான். அம்முயற்சியில் ஈடுபடும் அவனுக்கு அவன் கலையைப் பெறும் இரசிகர்களின் முழு அனுதாபங்களும் உண்டு. ஆகவே கலைஞன் கொடுத்து வைத்தவனே. ஏனெனில் எங்கும் வியாபித்து அருவமாய் நிற்கும் பரம்பொருளை ஓர் உருவம் உள்ளவன் என்பது அறிவுக்கோளாறு என்பதும் பராபரத்தின் யோக மாயையில் உண்மைகள் திரையிட்டு மறைந்து இருக்கின்றன என்பதும் இந்திய மாந்தர் அறிந்த விடயங்களேயாகும்.

கலையின் உன்னத நோக்கம் இயற்கையைப் பாவனை செய்து வெற்றி பூர்வமாக அமைத்தலே என்னும் குழந்தைப் பருவக் கருத்திலின்று முன் நெடுநாள் தொட்டே ஆசிய மக்கள் விடுதலை பெற்றுள்ளரை தற்கால ஐரோப்பியப்பெருமக்கள் ஃபீடியஸ் (Pheidias) என்பவரின் முறையைப் பின்பற்றி ஓவியங்களைத் தீட்டுவதில் மட்டும் சிரத்தை எடுத்துக் கொள்ளுகிறார்களன்றி உணர்வை உன்னுவதில்லை "கொதிக்" (Gothic Architecture) கட்டிடக் கலையின் துணையினால் முற்றிலும் உடல் வனப்பையே எத்திப் போற்றும் கிரேக்கரின் வெளிப்பகட்டுக்கலையின் பிடியினின்று ஐரோப்பா சிறிது காலம் விடுதலை பெற்றிருந்தது ஆயினும் மீண்டும் மறுமலர்ச்சிக் காலந்தொட்டு கட்டுக் கடங்காத அறிவு விடாய்களுக்குத் தலைபணிந்து விட்டது. அதன் நேரிடையான விழைவுயாதெனில் இன்று ஐரோப்பியக்கலை விஞ்ஞானத்தால் சீரழிக்கப்பட்ட மேலைநாட்டு அழிவு நிலைபெற்றுள்ள இன்றைய கலைஞரிடம் இருந்து உயர்ந்த கருத்துக்களையோ (Ideas) கற்பனையையோ (Imagination) மனோரதத்தையோ (Fancy), மிருதுத் தன்மையையோ (Tenderness) எதிர்பார்க்க முடியவில்லை. அவர்கள் எதிர்பார்ப்பது, உலகியல் உண்மைப் பொருத்தம் (Realism) அவர்கள் எதிர்பார்க்கும் உண்மை நிலைக்கும், உறுதிப் பொருள்களின் உண்மைக்கும் எவ்வளவு காத தூரம் உள்ளது, அல்லது எதிர்த்துருவமானது என்பதை, அவர்கள் நினைவுகூருவதில்லை.

இன்றைய கலை ஒரு மதிச்சார்பான இயக்கம் அன்றைய வரலாற்று ஓவியக் கலைஞன் அல்லது சமய ஓவியக் கலைஞன் இன்று தொல் பொருளாராய்ச்சியாளனாகப் பரிணமித்து விட்டான். அதுதான் விசுவாசத்தின் தன்மை போலும். மத்திய காலத்து இத்தாலி தேசத்து அல்லது சீன தேசத்து ஓவியக் கலைஞர்களோ, அன்றேல் எகிப்து நாட்டு அல்லது இந்திய நாட்டு உருவ ஓவியக் கலைஞர்களோ இவ்வாறு பணியாற்றவில்லை. அவர்கள் யாவரும் உண்மையை உள்ளொளியில் இருந்தே நாடிப் பெற்றனர். நாம் வாழ்க்கையை நேர்மையாகச் சித்தரித்தல் என்ற சொற்றொடரைக் கேட்டுள்ளோம். ஆனால் வாழ்க்கை என்றால் என்ன? இத்தக் கலைஞர்களாகிய உயர்ந்த புருஷர்கள், நமக்கு அறிமுகமுள்ள உலகினின்று, வித்தியாசமான - உண்மையான - அதிசயமான உலகில் வாழ்ந்திருந்தனர் என்பதை, நாம் உணர்வதில்லை. அவற்றை நாம் அறியாததால், அந்த உலகு போலியானது என்று மதிப்பிடுகின்றோம்.

மனிதர் என்ன கனுக்களைக் காணுகின்றனரோ அவை தான் உண்மையுடையவை. அவர்கள் ஆற்றும் செயல்கள் அன்று; எண்ணமே செயலிலும் பார்க்க எல்லையில்லாச் சிறப்பு வாய்ந்தது. ஒரு சாதியாரின் கனுக்கள், கடவுளைப் பற்றிய சிந்தனைகள் - இவை தான் கலையின் உயர்நிலைகள் அன்றி உடல் என்ற கருவியால் இயற்றப்படும் வினைகள் அல்ல. கலையானது பொருள்களைப் பிரித்து ஆராய்வதால் பெறுவதொன்றல்ல; ஆனால் அவற்றின் சேர்க்கை

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழக விவசாயிகள் சங்கப் பிரமுகர் கூறுகிறார்

# "இலங்கை விவசாயிகளுக்குள்ள வசதிகள் இந்தியாவில் இல்லை!"

## யாழ். கமநல உதவி ஆணையாளருடன் கலந்துரையாடல்

சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த தமிழக விவசாயிகள் சங்கப் பிரமுகர் திரு. கே. குமார் யாழ்ப்பாணக் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் திரு க பரமலிங்கத்தைச் சந்தித்து இலங்கை - இந்திய விவசாய முறைகள் பற்றிக் கருத்துப் பரிமாறிக் கொண்டார். அதனை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

### நியாய விலை

இந்தியாவில் விவசாயிகளால் விளைவிக்கப்படும் விளை பொருட்களுக்கு உத்தரவாத விலை அரசால் நிர்ணயிக்கப் படவில்லை எனவும் இதனால் விளைபொருட்களைக் குறைந்த விலையில் விற்பதால் தமிழக விவசாயிகள் பெரும் துன்பம் அடைகின்றனர் எனவும் திரு. கே. குமார் ஏக்கத்தோடு கூறியதைச் செவிமடுத்த உதவி ஆணையாளர் திரு பரமலிங்கம், இலங்கையில் நியாய விலையில் அரசே விளைபொருட்களை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்கின்றது எனவும் உதாரணமாக செத்தல் மிளகாயை றாத்தல் ஒன்று 10 ரூபா 50 சதமாக அரசு கொள்வனவு செய்கிறது என்றும் கூறியதும் திரு. குமார், நம் நாட்டிலே ஒரு றாத்தல் மிளகாயை இரண்டு மூன்று ரூபாவுக்குத்தானே வியாபாரிகள் வாங்குகின்றார்கள்." என்றார். இதற்கு திரு. பரமலிங்கம் தமிழகத்தில் போதிய பாசன வசதியும் போதிய இடப்பரப்பும் இருப்பதனால் விவசாயிகளால் இலகுவாகச் சாகுபடி செய்ய முடிகிறதெனவும் ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரை போதிய நீர்ப்பாசன வசதி இன்மையால் விவசாயிகள் அல்லும் பகலும் தோட்டத்திலேயே பாடுபடவேண்டியிருக்கிறது எனவும் அத்தோடு ஒவ்வொரு விவசாயிக்கும் குறைந்த நிலப்பரப்பே இருப்பதால் அவன் அந்த குறைந்த நிலத்திலிருந்து கூடிய விளைச்சலைப் பெற வேண்டி பசளையிடுதல், மருந்தடித்தல் போன்ற தொழில் நுட்ப வழிகளைக் கையாளுகிறான் எனவும் இதற்குப் பெருந்தொகையான செலவு ஏற்படுவதினாலேயே யாழ்ப்பாணத்து விவசாயியின் உற்பத்திச் செலவு அதிகமாக உள்ளது எனவும் கூறினார்.

### சங்க அமைப்பு

இலங்கையிலே விவசாயிகளுக்குச் சங்கம் இல்லாமல் இருப்பது இலங்கை விவசாயிகள் போதியளவு வசதிகளை அரசிடமிருந்து பெறுவதனாலேயே என்று திரு குமார் குறிப்பிட்டார். இந்தியாவில் விவசாயிகளுக்கு போதிய அளவு பாதுகாப்பு இல்லை என விளக்கிய குமார் அங்கு குத்தகை விவசாயிகள் என்ற ஒரு நிலையே இல்லை எனவும் பண்ணைகளில் வேலை செய்யும் கூலிகளாகவே விவசாயிகள் மதிக்கப்படுகின்றனர் எனவும் பண்ணையாளர் விவசாயி மேல் திடீரென நடவடிக்கை எடுத்தால் விவசாயிக்கு எந்தவிதமான சட்டப் பாதுகாப்பும் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

### மின்சார நீரிறைப்பு

இந்தியாவின் எல்லா விளை நிலங்களும் மின்சாரத்தால் இயங்கும் நீரிறைப்பு யந்திரங்களாலேயே நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது எனவும் அரசு மின்சார மீட்டர்களுக்கென நிலையான கட்டணத்தையும் பயன்படுத்தப்படும் மின்சார யூனிற்றுக்களுக்கென வாடகையையும் வசூலிக்கிறது எனவும் கூறிய திரு. குமார் தற்போது தங்கள் சங்கம் மின்சார மீட்டர்களுக்கென நிலையான கட்டணத்தை விவசாயிகளிடம் இருந்து பெற வேண்டாமெனக் கோரிக்கை விடுத்து வருவதாகக் கூறினார்.

### பயிர்ப் பாதுகாப்பு

இலங்கையில் பயிர் நட்டக் காப்புறுதி உள்ளதென ஆணையாளர் திரு. பரமலிங்கம் கூறியதும் திரு. குமார் மூக்கின் மேல் விரலை வைத்து "சார் நம்ம ஊரிலே பயிர்க் காப்புறுதி என்ற ஒரு அமைப்பே இல்லை. அடிக்கடி ஏற்படும் இயற்கைச் சீற்றத்தால் பயிர்கள் அடிக்கடி பாதிக்கப்படுவதால் நம்ம விவசாயிகளுடைய பொருளாதாரமே படுவீழ்ச்சி அடைகிறது" என்றார். "அது மட்டுமல்ல சார், இந்தியாவிலே அரச ஊழியர்கள் திடீரென இறந்தால் நட்ட ஈடு வழங்குகிறார்கள். ஆனால் தொழிலாளிகள் விஷக்கடி விபத்து போன்ற பல ஆபத்துக்களால் அடிக்கடி இறந்தும் கூட நம்ம விவசாயிகளுக்கு எதுவித நட்டஈட்டையுமே அரசு வழங்குவதில்லை. இதனால் தொழிலாளர் குடும்பங்கள் நடுத்தெருவிலே நிற்கிற பரிதாப நிலை ஏற்படுகிறது" என்று கூறினார்.

"இலங்கையிலே பயிர்களுக்கு கால் நடைகளால் அடிக்கடி நட்ட மேற்படுவது உண்டு; உங்கள் ஊரில் அப்படி ஏற்படுவதில்லையா?" என ஆணையாளர் கேட்டபோது "இல்லை சார், இவ்விடயத்திலே நம்ம விவசாயிகள் ரொம்ப ஒற்றுமை. கால் நடைகளைக் கட்டி வைத்து கவனமாக வளர்ப்பாங்க" என்று திரு. குமார் கூறியதும் உதவி ஆணையாளர் "இதனை நம்முடைய விவசாயிகள் சரியாகக் கடைப்பிடிக்கிறார்கள் இல்லை. இப்போ இதற்கு சட்டத்தின் மூலம் நாம் கடும் [illegible] மாளித்துள்ளோம். பயிர்க்கு சேதம் விளைவித்து பிடிபடும் கால் நடைகளை உரியவர் பெற விரும்பினால் பயிர்ச் சேதத்துக்கான நட்டஈட்டோடு தண்டப் பணமும் கட்டியே மீளப் பெறலாம். நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குள் கால் நடைகளை உரிமையாளர் பெறத் தவறினால் அவைகளை உடனே ஏலத்தில் விற்க தற்போதைய சட்டம் வழி செய்துள்ளது." என்றார்.

### நீர்ப்பாசனப் பராமரிப்பு

"தமிழகத்தில் விவசாயிகள் தாமாகவே விவசாய நீர்ப்பாசன மதகுகளை பராமரிப்பார்களெனக் கூறிய திரு. கே குமார், தமிழகத்தில் கொங்கிறீற் தடுப்புகளே நீர்ப்பாசன மதகுகளில் அதிகமாகப் பொருத்தப்பட்டுள்ளதெனக் கூறினார்.

### கடன் வசதி

இலங்கை விவசாயிகளுக்கு இருக்கும் கடன் வசதிகளை திரு. குமார் வெகுவாகப் பாராட்டினார். வங்கிகள் தாமதமில்லாமல் இக்கடன்களை வழங்குவதையும் அவர் புகழ்ந்தார். உண்மையில் இலங்கை விவசாயிகள் பாக்கியசாலிகள் எனவும் இங்கிருப்பது போன்ற வசதிகள் தமிழகத்தில் இருப்பின் விளைச்சல் பல மடங்கு அதிகரிக்கும் எனவும் வாய்விட்டுப் புகழ்ந்தார்.

### நன்றி

இறுதியில் இன்முகத்தோடு தம்மை வரவேற்று இலங்கை விவசாய முறைகள் பற்றி விளக்கியமைக்காக யாழ். கமநல சேவைகள் உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கத்திற்கு திரு. குமார் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். இச்சந்திப்பின் போது பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. க. விவேகானந்தனும் கலந்து கொண்டார்.

— பற்றிமாகரன்

---

### உயர்ந்த......

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

(கூட்டுமை) யால் பெறப்படுவதேயாகும். கலை உரு விளக்கும் பொருள்களின் பின் இருக்கும்; 'தான்' உருவிளக்காத பொருளின் திரை நீக்கம் எல்லாவற்றிலும் மேலாக அன்பு என்னும் ஒரு மையின் திரை நீக்கமே கலையாகும்.

(தொடரும்)

---

## ஏந்திழையே எத்தனைநாள்?

செம்பவழ இதழ்களினைச் சுவைப்பதற்கும்
செவ்விளநீரால் தாகம் தீர்ப்பதற்கும்
சங்குவளைக் கரமெடுத்து மெல்லக்கன்னம்
தனில்ஒற்றி மலர்மென்மை தனைக்காண்
டற்கும்
கங்குலெது? பகலுமெது? என்றபேதம்
காணாத புதுஉலகம் தனைக் காண்டற்கும்
இங்கு தவம் எத்துணைநாள் புரிதல்வேண்டும்
என்பதினை ஏந்திழையே உரைத்தல்வேண்டும்

காந்தளெனும் உன் கரத்தால் அன்பும்
சேர்த்தே
கண்ணே நீ ஊட்டுகின்ற உணவுதன்னை
மாந்துதற்கும் அருகிருந்தே நீ அப்போது
மனதாரத்தரும் இனியசொற் கேட்டற்கும்
சாந்தமுறும் உன்மேனி என்ற யாழைத்
தரையினிலே காலமெல்லாம் நான்
மீட்டற்கும்
ஏந்திழையே நிலைத்த தவம் எத்துணைநாள்
இன்னும் நான் புரிந்திடுதல் வேண்டும்
சொல்வாய்?

கிள்ளையினம் ஒன்றையொன்று கொஞ்சக்
கண்டு
கிளக்கரும் நின் எழில் முகத்தில் நாணம்
மேவும்
கொள்ளை இன்பக் காட்சியினைக்
காண்பதற்கும்
கோதையே நீ சிரித்துக்கொள்ளும்வேளை
உள்ளமதைக் கவர்கின்ற பூ மொட்டுக்கள்
ஒருங்கசைந்து செயும் இன்பம் தனைக்
காண்டற்கும்
எள்ளரிய பெருந் தவத்தை இங்குநானும்
ஏந்திழையே எத்தனைநாட் புரிதல்வேண்டும்!

புலவர் ம. பார்வதிநாதசிவம்

---

# அரங்கும் அவையும்

### அரங்கக் கல்லூரியில் ஒரு நாள்

காலைகளை நல்லாய் நீட்டி கைகளைப் பக்கத்தில் எறிந்து போட்டமாதிரிப் படுக்கின்றோம். தலை நேரே முகட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. மூச்சை மூக்கால் நல்லாய் உள்ளுக்கு இழுத்து, வயிற்றை நிரப்புகிறோம். வயிற்றில் கையை வைத்துப் பார்த்தால் நிரம்பியது தெரியும். பின்னர் வாயை நல்லாகத் திறந்து மூச்சை ஆறுதலாக விடுகிறோம் மூச்சை உள்ளே எடுத்தல், வயிற்றுக்குள்ளே காற்றை வைத்திருத்தல், இனி வைத்திருக்க முடியாது என்ற கட்டத்தில் வாயினால் வெளியே விடுதல் - இதுவே சுவாசப் பயிற்சியாகும். பயிற்சியளிப்பவர் ஹா... என்று குரல் கொடுக்க நாமும் ஹா... என்று குரலெழுப்புகிறோம். அவர் ஹாஹா என்னும் போது நாமும் அப்படியே கத்துகிறோம். எமது சத்தத்தில் காத்திரமும் கனதியும் தெளிவும் இருப்பதை இப்பயிற்சி மூலம் உணர்கிறோம். சுரவரிசைக்குத்தக மேற்படி பயிற்சியை செய்யச் செய்ய மென்மேலும் நாம் பதப்படுகிறோம். குரல்வளம் கூடுகிறது. நடிக்கும் போது குரலினை வேண்டிய அளவுக்கு வெளியே கக்கி, எறிந்து, கேட்கக் கூடிய அளவுக்கு பேசியும் பாடியும் நடிக்க இப்பயிற்சி துணை நிற்கிறது.

ஒரு பெரியவர் அறிமுகம் செய்யப்படுகிறார். ஆமாம் திரு. பூந்தான் ஜோசப் தான் அவர். வயது எழுபத்து நாலு. பருத்த உருவம்; சிறிய மீசை; தெளிவான குரல்; பெயர் போன அண்ணாவி அவர். அவர் எமக்கு நாட்டுக் கூத்துப் பாடல்களின் மெட்டுக்களைப் பழக்குகிறார். "அலங்கார ரூபன்" கூத்தினுடைய காப்பு [illegible] ருத்தத்தை அவர் பாட அவருடன் சேர்ந்து நாமும் பாடினோம். உச்சரிப்பு, ஆடல், பாடல் என்பவற்றில் நடிகன் திரும்பத் திரும்ப பயிற்சி செய்தால் அவன் திறமை பெருகும் என்பதில் ஐயமில்லை.

### சின்னையா சிவநேசன் மடல் கண்டேன்

"தாங்கள் அரங்கும் அவையும் பகுதியில் தந்த செய்திகளுக்கு நன்றி. அதில் நீங்கள் எழுதியிருந்த ஒரு விடயத்தைப் பற்றி விளக்கமளிக்க விரும்புகிறேன் ஒலிபெருக்கி பாவிப்பது பற்றிய குறிப்புகளுக்கு கண்டனம் தெரிவித்துள்ளீர்கள். நானும் ஒலிபெருக்கி பாவிப்பதற்கு எதிரான கருத்துடையவன் தான், நடிகன் தன் சொந்தக் குரலையே நம்பி நடிப்பது தான் சிறந்தது என்பதை வரவேற்கிறேன். ஆனால் எனது நாடகத்தில்

## கலைப்பேரரசு ஏ.ரீ.பொன்னுத்துரை

ஏழு நடிகர்கள் அசையாது நிற்க Freeze நிலையில் பின்னணியில் அயலவருடைய பேச்சுக்களையும், அவர்களின் மன எழுச்சிகளையும் வெளிக் கொணர்வதற்கான ஓர் உத்தியாகவே ஒலிபெருக்கி பயன்படுத்தப்பட்டது மேடையில் உலாவும் பாத்திரங்கள் ஒலி பெருக்கி இல்லாமலேயே பேசி நடித்தார்கள். நிகழ்ச்சியை பார்வையாளருக்கு உணர்த்தவே இவ்வுத்தி கையாளப்பட்டது.

திறந்த வெளியரங்கில் கடலைபோன்ற பார்வையாளர் மத்தியில், இப்படியான கட்டங்களில் ஒலிபெருக்கி உபயோகம் வேண்டித்தான் இருக்கிறது. மண்டப அரங்குகளில், குரல்வளம் உள்ள நடிகர்களை உபயோகித்தே மேற்கூறிய உத்தியின் தாக்கத்தைப் பெறமுடியும். அரங்குகளின் நிலைகண்டு சில அவைகளை நெறியாழ்கை

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காலக் கண்ணாடி

யாழ்ப்பாணத் திலிருந்து கிராமப்பகுதிக்குச் செல்லும் பஸ்வண்டியொன்றில் ஏறுவதற்காக வெளிநாட்டு நண்பர் ஒருவருடன் 'கியூ'வில் காத்திருந்தேன். பிரயாணிகள் வரிசையாக நின்று டிக்கட் வாங்குவதைப் பார்த்து அவருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை மிகவும் 'ஒழுங்கான' மக்கள் என்று என்னிடம் கூறித் தலையை ஆட்டிக்கொண்டார்.

'இன்னும் இரண்டு பேருக்குத்தான் இடமிருக்கு மற்றவர்கள் அடுத்த பஸ்ஸில் வாருங்கள்' என நடத்துநர் அறிவித்தார். எங்களுக்குப் பின்னால் நின்றவர்கள், முன்னால் நின்றவர்கள் பக்கத்தில் நின்றவர்கள் எல்லாருமே முண்டியடித்துக்கொண்டு பஸ்ஸில் ஏறத்தொடங்கிவிட்டார்கள்.

வெளிநாட்டு நண்பரின் முகத்தில் அசடுவழிந்தது.

அடுத்து வந்த பஸ்ஸில் ஏறினோம். ஒரு சீட்டில் இடமிருந்தது அமரும்படி அவரிடம் கூறினேன் 'மகளிர் மாத்திரம்' என்ற அறிவிப்பைப் பார்த்துவிட்டு அமர மறுத்துவிட்டார். சற்று நேரத்தில் சில வாலிபர்கள் எங்களை விசித்திரமாகப் பார்த்துவிட்டு அந்த ஆசனத்தில் அமர்ந்துவிட்டார்கள். அதற்குப்பிறகு ஏறிய பெண்களுக்குக்கூட அவர்கள் எழுந்து இடம்கொடுக்கவில்லை. வெளிநாட்டு நண்பர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை.

உடன் வந்த இன்னொரு நண்பர் சிகரட் பாக்கெட்டை எடுத்து நீட்டினார். அதில் ஒன்றை எடுத்துக்கொண்ட வெளிநாட்டவர் 'புகைபிடித்தல் தடை' என்ற அறிவிப்பைப் பார்த்துவிட்டு சிகரட்டைப் 'பாக்கெட்டில்' போட்டுக்கொண்டார்.

ஆனால் வெய்யில் புழுக்கம் ஒன்றையும் பொருட்படுத்தாமல் பலர் சிகரட்டை ஊதித் தள்ளிக்கொண்டிருந்தது அவருக்கு விசித்திரமாகப்பட்டிருக்கும். பஸ்ஸில் இருந்து இறங்கியபின் அந்த நண்பர் சொன்னார், 'உங்கள் நாட்டில் அறிவிப்புகள், ஒழுங்குவிதிகள் எல்லாம் மதிக்கப்படுவதில்லைப் போலிருக்கிறது' என்று.

'சட்டங்களை ஆக்குபவர்களே அதனை நடைமுறைப் படுத்த அக்கறைப்படாத போது சாதாரண பொதுமக்கள் என்ன செய்வார்கள்' என்று கூறலாம் போல் தோன்றியது. ஆனால் அதற்கு அவர் விரிவான விளக்கம் கேட்டுவிட்டால்! அதனால் மௌனமாக இருந்து சமாளித்து அரசியல் தெரிந்த அன்பர் ஒருவரிடம் அவரை அனுப்பிவைத்தேன்.

●

மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா விசேஷ அழைப்புப் பெற்று தமிழகம் சென்று அங்கு பல மேடைகளில் முழங்கிவிட்டு வந்திருக்கிறார். தமிழ் நாட்டில் சிலருக்கு ஜீவாவின் பேச்சு சிங்களத்தமிழாக ஒலித்திருக்கிறது. விகடன் 6-4-80 இதழில் வெளியாகியுள்ள ஒரு குறிப்பில் ''சிங்களத்தமிழில் கம்பீரம் தொனிக்க'' ஜீவா பேசியதாக எழுதப்பட்டுள்ளது. 'யாழ்ப்பாணத்தமிழில்' என்று இருந்திருப்பின் ஒத்துக்கொள்ளலாம் ஆனால் சிங்களத்தமிழ் என்று ஒன்றும் இங்கு இல்லையே! இது விகடனுக்குப்புரியாதுபோனது விசித்திரம் தான்.

●

ஆள் இல்லாதசமயம் பார்த்து வீட்டுக்கூரைமீது கல்லெறிந்து ஓட்டை உடைப்பார் ஒருவர்; ஓடு உடைந்துவிட்டதைப்பார்த்து வீட்டுக்காரர் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போது ஓடு உடைத்தவரின் நண்பர் கூரை திருத்துவதற்கான ஓடுகளுடன் அங்கே ஆஜராகிவிடுவார். வேலையில்லாத் திண்டாட்டத்தை இவர்கள் இப்படிப் போக்கிக் கொள்வதாக அண்மையில் வெளிவந்துள்ள தமிழ்ப்படமொன்றில் நகைச்சுவையொன்று புகுத்தப்பட்டுள்ளது.

சிலமாதங்களுக்கு முன் வெளிவந்த தமிழ்ப்படமொன்றில் ஒருவர் வீட்டுச்சுவர்களில் சேற்றைவாரிப் பூசிவிட்டுப் போய்விடுவார்; சற்று நேரத்தில் வெள்ளையடிக்கும் பொருட்களுடன் அவர் நண்பர் ஸ்தலத்தில் ஆஜராகிவிடுவதாக ஒரு 'தமாஷ்' காட்டப்பட்டது.

சிலவருடங்களுக்கு முன்னர் வெளிவந்த தமிழ்ப்படமொன்றில் யன்னல்களை ஒருவர் கல்லெறிந்து உடைத்துவிட்டு மறைந்து விடுவார். அவரது நண்பர் உடனே கண்ணாடிகளுடன் யன்னல் திருத்துபவனாக ஸ்தலத்தில் ஆஜராகி விடுவதாக ஒரு வேடிக்கை காட்டப்பட்டது.

இந்தப் படம் வெளிவந்த சமயம் தமிழக ஏடு ஒன்றில் ஒரு விமர்சகர் பின்வருமாறு எழுதியிருந்தார்:

இந்தப் படத்தில் யன்னல் கண்ணாடிகளை ஒருவர் கல்லெறிந்து உடைத்துவிட்டு மறைந்தவுடன் அவரது நண்பர் கண்ணாடிகளுடன் யன்னல் திருத்துபவராக ஆஜராகும் சம்பவம் நல்ல நகைச்சுவை தான். ஆனால் அந்தப் படுபாவி சார்லிசாப்ளின் தனது படமொன்றில் இந்தக் காட்சியைப் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே காப்பியடித்துக் காட்டிவிட்டானே!

அரைத்த மாவையே அரைப்பது நமது தமிழ்ப் படத்தயாரிப்பாளர்களுக்கு வாடிக்கையான விஷயமாகிவிட்டது போலும்'

●

பழக் கொட்டையை
வவ்வால் போடும்,
கூரையில் சப்தம் எழும்
அது எனக்குப் புரியும்.
அணில்கள் ஓடும்
பூனைகள் சண்டை
பிடித்துக் கதறும்
இவையும் எனக்கு விளங்கும்
ஆனால்...! இரவு சாமத்தில்
தூரத்தில் மறைவிடத்தில்
ஒளித்து நின்று
என் வீட்டின்
கூரையைக் குறிபார்த்து
கல்லெறிந்து
களிப்படையும்
அந்த மனிதனின்
மனதைத்தான்
புரிந்து கொள்ள
முடியவில்லை!

-- [illegible]

## பல் வைத்தியம்-10

# பற் பாதுகாப்பு

பல்வைத்திய கலாநிதி **பா. சோ. பாரதி**

பற்களைப் பாதுகாப்பதில் பல்துலக்குதலின் முக்கியத்துவம் பற்றிச் சென்ற வார இதழில் விளக்கம் தரப்பட்டிருந்ததல்லவா. முதன் முதலாக 1780 ஆம் ஆண்டிலே பற்றூரிகை செய்யப்பட்டது. இதற்கு முன்னர் மக்கள் பற்களைச் சுத்தமாக வைத்திருக்கத் தமது விரல்களினாலும், மரக்குச்சிகளினாலும் (Chew Sticks) பல் துலக்கிவந்தார்கள். காலப்போக்கில் பற்றூரிகையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டு இன்று நல்ல தரமான பற்றூரிகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் எல்லோரும் பற்றூரிகையும் பற்பசையும் பாவித்துப் பயனடைய முடியாதவாறு அவர்களின் பொருளாதாரநிலை தடுப்பதைக் காணமுடிகிறது. இவர்கள் தமிழ் வைத்திய நூல்களிற் கூறப்பட்டது போன்று ஆலம்விழுது, வேப்பங்குச்சு முதலியவற்றால் விளக்கலாம். இவற்றை தூரிகை போல நன்றாகத் தட்டிப் பதப்படுத்தி முரசைக் காயப்படுத்தாது அவதானமாக விளக்கலாம் இவற்றில் கிருமிகளை அழிக்கும் தன்மையும் அழுக்கை அகற்றிப் பற்களை வெண்மையாக்கும் தன்மையும் இயற்கையாக உண்டு என்பர். பற்பசைக்குப் பதிலாக பாக்குச் சுட்ட கரியை நன்றாக அரைத்து அரித்து பதம்படுத்திய வேப்பந்தச்சியாற்றெட்டு பற்களை விளக்கலாம். கறி உப்பைப் பாக்குச் சுட்டகரியுடன் சேர்த்து அரைத்தும் பாவிக்கலாம்.

### நாவலர் காட்டும் நல்வழி

பற்களைத் தூய்மையாய் வைத்திருக்க உணவிற்குப்பின் நீரினால் அலம்பினால் நன்மை பயக்கும் என்பது ஆராய்ச்சியாளரின் முடிவு. (Water Irrigation under Pressure) இதை எமது நாவலர் பெருமான் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு தெளிவாகக் கூறியுள்ளார். உணவு உட்கொண்ட பின்னர் சுத்தமான நீரினாலேயே வாயை அலம்பும்படி நாவலர் வற்புறுத்தும் காரணத்தைப் பலர் அறியார். அவர் கூற்றிலே அறிவியலுண்மை நிறைந்திருக்கின்றது. அதனைச் சிறிது ஆராய்வோம்.

பல்விளக்கியபின் கால் முகம் கழுவ முன் வாயை நீர் கொண்டு பன்னிரண்டு தரமும், சோற்றுணவு உண்டபின் பதினாறு தரமும், சோறல்லாத பண்டங்களையுண்டபின் எட்டுத்தரமும் கொப்பளித்தல் வேண்டுமென்று விதித்தார். ஒவ்வொரு முறையும் கொப்பளிக்கும்போது பற்களிலும் பற்களின் ஈறுகளிலும் எஞ்சித் தேங்கி நிற்கும் உணவுத்துகள்கள் வாயினின்றும் படிப்படியாக வெளிப்படும். அன்றியும் கிருமிகளும் அவற்றால் உண்டாகும் அமிலப்பற்றும் வெளியே கழிந்து போகின்றன.

காலை எழுந்தவுடன் வைகறைப் பொழுதில் பல் விளக்கியவுடன் வாயைப் பன்னிரண்டுதரங் கொப்பளிக்கும்படி விதித்தார். அங்ஙனஞ் செய்வதனால் பல்லின் சுகநிலைக்கு வேண்டப்படாத பொருள்கள் வாயினின்றும் நீக்கப்பட்டு வாயும் பற்களும் தூய்மையும் அழகும் உடையனவாய் விளங்குமன்றோ!

இனிச் சோற்றுணவிலே உண்பன, தின்பன, நக்குவன பருகுவன ஆகிய பல்வேறு பொருள்கள் சேர்தலினால் உணவெச்சங்கள் மிகுதியாகும். ஆதலினால் அவற்றையும் கிருமிகளையும் அமிலத் தன்மையையும் பற்றறப்போக்குவதற்குப் பதினாறுமுறை கொப்பளித்தல் வேண்டுமென்று விதித்தார். சோறல்லாத பண்டங்களால் வரும் உணவெச்சம் மிகுதிப்படாததால் எட்டுமுறை கொப்பளித்தல் வேண்டுமென்று விதித்தார். இவைகளால் நாமறிவது என்னவென்றால் பற்களின் நீண்டகால சுகவாழ்விற்கு இப்பழக்கங்கள் அதியாவசியமானவை என்பதே.

இவையொருபுறமிருக்க, நாவலர் பெருமான் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு தாம் செய்தருளிய நான்காம் பாலபாடத்திலும், சைவ வினாவிடையிலும் பற்களின் பாதுகாப்புப் பற்றிக் கூறியுள்ளவைகளை இங்கே சுருக்கமாகத் தருகிறேன்.

'இயல்பாகிய துவருள்ள தாள், இலை, கொம்பு என்பனவைகளினாலே பல்லின் உள்ளேயும் புறத்தையும் செவ்வையாக விளக்கல் வேண்டும். இப்படி விளக்கினால் வாத, பித்த, சிலேட்டுமங்களினாலே பல்லினிடத்தும் வேரினிடத்தும் உண்டாகின்ற இருபத்து மூன்று உரோகங்களும் உண்டாகாவாம். பற்கள் அசைவில்லாமல் உறுதியாய் இருக்கும். செங்கல், மணல், கரி, பாளை, வைக்கோல் என்பனவைகளினாலே பல் விளக்கலாகாது'- பாலபாடம்.

விதிக்கப்பட்ட தந்தகாட்டத்தையேனும் இலையையேனும் சலத்தினாலே கழுவி, மௌனமாய் பொருந்திக் கிழக்கு நோக்கியேனும் வடக்கு நோக்கியேனும் குக்குடாசனமாக இருந்து கொண்டு பல்லின் புறத்தையும் உள்ளையுஞ் செவ்வையாகச் சுத்திசெய்து ஒரு கழியை இரண்டாகப் பிளந்து, ஒவ்வொரு பிளப்பையும் மூன்று தரம் உண்ணுவனவாக ஓட்டி நாக்கை வழித்து இடப்புறத்திலே எறிந்துவிட்டு, சலம் வாயிற்கொண்டு பன்னிரண்டு தரம் இடப்புறத்திலே கொப்பளித்து முகத்தையும் கைகால்களையுங் கழுவி ஆசமனம் செய்தல்வேண்டும்- சைவவினாவிடை.

'போசனம் முடிந்தவுடன் எழுந்து வீட்டுக்குப் புறத்தே போய்க் கைகழுவிவிட்டுச் சலம் வாயிற்கொண்டு பதினாறுதரம் இடப்புறத்திலே கொப்பளித்து வாயையுங் கைகளையுங் கால்களையுங் கழுவி ஆசமனம் பண்ணி விபூதி தரித்தல் வேண்டும். அன்னமல்லாத பண்டங்கள் புசிக்கின் எட்டுத் தரங் கொப்பளித்து ஆசமனம் பண்ணல் வேண்டும்'

-சைவவினாவிடை

### வாயைச் சுத்தப்படுத்த மருந்துவகைகள் தேவையானதா?

பொதுவகையில் நோக்குமிடத்து நல்ல சுகநிலையிலுள்ள பற்களுக்கும் அவற்றைத் தாங்கும் உறுப்புகளுக்கும் ஒரு மருந்தும் வேண்டியதில்லை. நாடோறும் உணவு உண்ட பின்னர் முறைப்படி பல் விளக்கி சுத்தமான நீரினாலே பலமுறை அலசி வருதலே போதுமானது. பற்களிலாயினும் மற்ற இழையங்களிலாயினும் வருத்தம் உண்டாகுமிடத்து விசேட பாதுகாப்புச்செய்தல் வேண்டும்.

9.ம் பக்கம் பார்க்க)

## அரங்கும்......

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

செய்வது பிழையல்ல. நாடக உலகுக்கு சிவநேசன் போன்றோரின் பங்களிப்பு அவசியமே.

குரும்பசிட்டி பொன். பரமானந்த வித்தியாலயம் மகா வித்தியாலயமாக உயர்த்தப்பட்டதை ஒட்டி பெருவிழா ஒன்று எடுக்கப்பட்டது. எதிர்க்கட்சித்தலைவர் மாண்புமிகு அ. அமிர்தலிங்கம் அவர்களும் பாரியாரும் பிரதம விருந்தினராய் கலந்துகொண்டனர். மலர் வெளியீட்டை திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆரம்பிக்கும்போது செயலாளர் திரு. சி நடராசா ஆசிரியர் ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

'மலர் வெளியீட்டால் 7000 ரூபா திரட்டினோமானால் நாமே ஓர் ஆசிரியரை மேலதிகமாக அமர்த்த முனையலாம்; ஆசிரிய தட்டுப்பாட்டை ஓரளவு தீர்க்கலாம்' என்ற பாணியில் பேசியதுதான் தாமதம் திரு. வ. இராசரத்தினம் என்ற பழைய மாணவர் உடனடியாகவே 7000 கொடுத்து மலர் ஒன்றைப் பெற்றார். இராசரத்தினத்தின் மனோநிலை போற்றப்படவேண்டியதே. இப்படியான வள்ளல்தன்மைகளை இலக்கிய உலகிலும் பெருகுமானால் காத்திரமான சேவையைப் புரியலாம் அல்லவா?

### சானா பற்றி சில்லையூர் செல்வராஜன்

மறைந்த கலைஞன் பற்றி வாழும் கலைஞன் வாழ்த்துகிறான். கவிமாலையில் சில அடிகள் இதோ.

'சோசி' என்னும் சிவபாத
சுந்தரமும் சொர்ணலிங்க
ஆசிரியனும் தந்த
ஆதரவினால் முறையே
பெற்ற திறமைப் பேறைப்
பெருவன்மை, எல்லாமே
ஈழத் தமிழுலகம் எய்தக்
கொடுத்துயர்ந்து ஓர்
வேழமாகக் கலைஞர்
மிசையில் மிளிர்ந்
திருந்தான்.
மேடையிலே, வானொலியில்
வெண் திரையிலே
நடித்தும்
ஈடரிய நாடகங்கள்
ஈடேற்றிக் காண்பித்தும்
'லண்டன் கந்தையா'வாய்
இயங்கி ஒரு பாத்திரத்தை
என்றும் நிலையாய்
இலங்கும்படி செய்தும்
'பரியாரி பரமர்' என்னும்
பாத்திரத்தைப்
பேணுவால்
சிரியார் சிரிப்பதற்கும்
செய்யும்ஒருசித்திரமாய்...

## அமரர் நல்லையாவின் ஆத்மாவுக்கு அஞ்சலி



அமரர் நல்லையா அவர்களின் 31 ம் நாள் அஞ்சலி தினத்தை நாம் நினைவு கூருவோம். ''சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்தில் என்னை மறவாதீர்கள்'' என்ற வாக்கிற்கொப்ப ஓராண்டு காலமல்ல கிட்டத்தட்ட 40 ஆண்டுகள் சேர்ந்து சீவித்தவரை எப்படி மறக்க முடியும்?

ஒடுக்கப்பட்ட ஊழியர் சங்கம், சிறுபான்மைத் தமிழர் மகாசபை, சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி, சிறுபான்மைத்தமிழர் விடுதலைமுன்னணி ஆகிய பல இயக்கங்கள் மூலம் அடக்கி ஒடுக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழ் மக்களின் கல்வி பொருளாதார, சமூக விடுதலைக்காக தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தவர் தியாகி அமரர் நல்லையா அவர்கள். தாம் பிறந்த இனத்திற்காகவும் சமூகப்பணிக்காகவும், தன்நேர்மை கண்ணியத்தைக் காக்கவும் தன் லிகிதர் வேலையையே துறந்தவர், சமூக விடுதலைக்காக ஊர்வலங்கள், போராட்டங்கள், சிறைவாசங்கள் பல கண்டவர். எடுத்த கொள்கையில் இம்மியளவும் விட்டுக் கொடாதவர். எதற்கும் அஞ்சாத தலைவன் என்பதற்கு எடுத்துக்காட்டானவர். தன் இனத்துக்காகவும், தமிழ் இனத்திற்காகவும், முழு இலங்கையருக்காகவும் தன் கொள்கையை விரிவுபடுத்தினார். அவர்போல்நேர்மையானவரை, தன்னலமற்ற தியாகியை நாம் காண்பதரிது. அவர் வகித்த பதவிகளோ பல. தன் உயிர் பிரியும்போதும் கூட இறுதிமூச்சுவரை எமக்காகவே பணிபுரிந்தார். அவர் பணி எத்தகையது என்பதை காலப்போக்கிலேயே உணர்வோம். கண்ணீர் சிந்துவோம்- அவர் விட்டபணியை தொட்டுச் செல்வோம்

க. செல்லத்துரை,
(இணைச் செ... உ... வி...
கூ... ச... தலைவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டாளி வர்க்கம் பரிதவிக்கிறது!

மங்காத புகழுடைய மாணிக்கத்திருநாட்டில் - ஓ! விலைமதிக்கமுடியாத இரத்தினக் கற்களின் விளைநிலமல்லவா ஈழம்! இவள்ளையினைக் கவர்ந்த இந்த வேளாளப் பூமியிலே பொருளாதாரத்தின் போக்குக் கவலைக்கிடமாகி வருகின்றது என்றால் நாட்டின் முன்னேற்றத்தில் நம்மவர் உழைப்பு எவ்வளவு பின்னேற்றத்தில் இருக்கிறதென்பதை அறியலாம்.

அதிகரித்துவரும் பண்டங்களின் விலையேற்றமும், அதனோடு போட்டிபோட்டுக்கூடிவரும் சனத்தொகைப் பெருக்கமுமே இதற்குக் காரணமெனக் கூறினாலும் மக்களின் ஊக்கமுள்ள உழைப்புத்திறன் இன்னும் சரிவர வெளிப்படுத்தப்படவில்லையென்பதே உண்மையான காரணம்.

உழைப்போன் ஒருவன், உண்டுகளித்து உல்லாசங் காண்போன் இன்னொருவன் என்றநிலை ஒழிந்து, யாவருமே உடம்பை வளைத்து உழைக்க முன்வந்தாலன்றி நாடு முன்னேறுவதற்கில்லை. பணமுள்ளவன் தின்று திமிர் எடுக்க பாட்டாளி வர்க்கம் பஞ்சத்திலுழலும் நிலைக்கே வழியுண்டாகிவருகிறது.

ஜெ. கி. ஜெயசீலன்
(யாழ். இந்துக் கல்லூரி)

## மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

ஏழை மக்களின் வாழ்வு இன்று பரிதாபகரமாக உள்ளது. வீட்டிலே வெளிச்சத்துக்கு விளக்கெண்ணெயை நினைக்கவும் முடியவில்லை. பசிதீரப் 'பாண்'கூட அணுக முடியாத உச்சவிலை. மாவின் விலைமட்டும் என்ன குறைவா?

விண்ணைத் தொடும் விலையேற்றத்தின் பிரதிபலன்கள், பாவம் பாட்டாளிவர்க்கத்தின் வயிற்றிலடிக்கின்றது. நாளுக்கு நாள் விரையும் விலையேற்றம், அவர்களுடன் விளையாடுகிறது. ஒரு பொருளின்விலை கூடினால் தொடர்ந்து ஒன்பது பொருட்களின் விலை உயர்கின்றது.

கடைகளிலே அவர்களுக் கேது கவலை? தாமுண்டு தம்வேலையுண்டு என்றிருந்து விடுவார்கள். பதுக்கிவைத்தல், நிறையைக்கூட்டிப்பொருளைக்குறைத்தல் போன்றவை கடைக்காரப் பெருமக்களுக்குக் கைவந்த கலை. சிறிதளவாவது சமுதாயத்தின் வளர்ச்சியைச் சிந்தித்துச்செயலாற்றுபவர்களாய் இல்லை. நமது நாடு, நம் சகமக்கள் என்றநினைவே இலாதவர்களாய் வியாபாரப்பெருக்கத்திலேயே கண்ணுங் கருத்துமாய் காலம் முழுவதும் இருக்கின்றார்கள்.

அரசாங்கத்திலும் தனியார் துறைகளிலும் உயர்ந்த வருமானம் பெறும் 'மனிதர்கள்' தங்கள் கீழ் வேலைபார்க்கும் ஒருவனுக்குக் கால்வாசி சம்பளமும் வழங்க விரும்பார்கள். காலந்தோறும் கஷ்டப்பட்டு உழைக்கும் அவனுக்கு வாழ்க்கையில் விடிவில்லை. அதிகரிக்கும் விலையேற்றம், உயர் சம்பளம்பெறுவோரை யாதுசெய்யும்? பாட்டாளி வர்க்கத்தைதான் படுகஷ்டத்திலாழ்த்தும். நாள்தோறும் உழைத்து, எடுத்த ஒரு சிறுதொகைப் பணத்திலே இமயத்தை எட்டி நிற்கும் பொருட்களை வாங்கிவிடமுடியாத இழிநிலையை என்னவென்பது?

''தனியொருவனுக்குணவு இல்லையெனில், இந்த ஜகத்தினை அழித்திடுவோம்...!'' என்று கவிக்குரல் கொடுத்த பாரதி மட்டும் இன்றிருந்தால், நம் நாட்டின் நிலைமையை எண்ணி எண்ணிக் கண்ணீர் உகுத்திருப்பான். பசியின் கொடூரத்தை அனுபவத்தித் சண்டறிந்தவன் அவன்; ஆயினும் யாற்தான் அப்பசி போக்கத் தன் கவிக்குரல் கொடுத்தான் அவன் கவிதை ஏட்டளவில் மட்டுமே நின்றுவிடுகிறது; செயல் முறையில் எடுபட்டாற்தானே?

மக்கள் தொகையில் கூடிய சீனவும், ஜப்பானும் முன்னேறவில்லையா? அங்கும் பாட்டாளி வர்க்கம் துன்புறுத்தப்படும் நிலைமையுண்டா, பொருளாதாரத்தால்? ஏதோ இங்கு மட்டுந்தான் நொண்டிச் சாட்டுக்கள் கூறி, நிலைமையை மோசமடையச் செய்கிறார்கள். சுயநலங் கருதும், சாதி வெறி காட்டும் முதலாளித்துவ வாதிகளால், நாட்டின் நலன், நட்டாற்றில் நழுவிவிடப்பட்டுத் தத்தளிக்கின்றது.

சொந்த நன்மைகளுக்காக-சொத்துக்களைத் திரட்டும் சுயநலப் பணிகளுக்காக, வாழ்வையே அர்ப்பணிக்கும் சில மனிதர்கள், வறிய மக்களின் வாழ்வினை நினைத்துப் பார்ப்பதே இல்லை. பெயரளவில், நாட்டில் சமநிலை, சமத்துவம், சகோதரத்துவம் பற்றிப் பேசிப் போலி வேடம் பூணுகிறார்கள்.

இத்தகையோரா நாட்டின் முன்னேற்றத்துக்கு நல்லதுணை புரிவார்கள்? பொது மேடைகளில் போடுகின்ற ''போலி'' முழக்கங்களால் பாட்டாளி வர்க்கத்தினைப் பிடித்திருக்கும் தரித்திர நிலை போய்விடுமா?

எதிலும், ஊழல், சுரண்டல், களவு - இந்தச் சமூகச் சீர்கேடர்களின் தொழில்களாக இருக்கும், பணத்தாசை கொண்டு பேயாக அலையுமிவர்களுக்குப் பாமர சனங்களின் படு கஷ்டங்கள் எங்கே தெரியப் போகிறது? பணத்தையே பெரிதென எண்ணி, பண்பினை மறக்கும் இந்தப் பணப் பேய்களுக்குப் ''பணம்'' ஒன்றே குறிக்கோள். தன் வாழ்வு வளமடைந்தாற் போதும், அதற்காக என்ன ''முயற்சிகள்'' எல்லாம் எடுக்க முடியுமோ, அத்தனையும் எடுத்து விடுவார்கள். பிறர் உழைப்பில் உல்லாசங் காண வேண்டும். அதிலும் அவனைச் சுரண்ட வேண்டும். இவை, கயவர்கள் கொள்கைகள். பாவம், இந்த அரக்கப் பிறவிகளால் பாட்டாளி வர்க்கம் பரிதவிக்கின்றது.

# மனிதனை மனிதன் இம்சைப்படுத்தினல்....!

நாமெல்லோரும் சுதந்திரம்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் இவ்வேளையிலே நம்முள் இருக்கும் சாதிமுறையை அழித்தொழிக்க எதையும் சாதித்துவிட்டதாகத் தெரியவில்லை. நம்மிடையே ஆண், பெண் என்ற இருசாதி மட்டுமே இருக்க வேண்டும். தீண்டாமை என்ற நான்கெழுத்து நம்மக்களிடையே எத்தனை பிரிவுகளை உண்டாக்கி நம் ஒற்றுமையை சிதைத்திருக்கிறது.

''இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்'' என்றுதான் பெரியவர்கள் கூறியிருக்கிறார்களேயொழிய அவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்று எவரையும் தள்ளி வைக்கவில்லை. ''நிறைகுடம் தளம்பாது'' என்பார்களே அது முற்றிலும் உண்மை படிப்பறிவு நிரம்பப் பெற்றவர்கள் ஒருபோதும் சாதி பாத்ததில்லை. அப்படி வரலாறுகூட இல்லை. அவர்கள் ஒருபோதும் தடுமாற்றமில்லாதவர்கள். ஆனல், இந்தகுறைகுடங்களோ தாம் பெரிய அறிவாளிகள் என்ற எண்ணத்தில் சாதி பார்க்கிறார்கள். தாழ்ந்தவர் எனக்கூறப்படுபவருக்கும் உயர்ந்தவர்கள் என்று கூறப்படுபவருக்கும் என்ன வித்தியாசம்?

இந்த சாதி வேற்றுமைக்கெல்லாம் முதல் காரணம் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளே ஆகும். ஒரு தொழிலையே எல்லோரும் செய்யமுடியாது. ஆகவே முற்காலத்தில் மக்கள் தமது வசதிக்கேற்ப பல்வேறுபட்ட தொழில்களைச் செய்து வந்தனர். சுயமாக இன்னொருவருக்கு அடிமைப்படாது செய்த தொழில்களைக்கொண்டு அவர்களைச் சாதியில் குறைந்தவர்கள் உயர்ந்தவர்கள் என்று மதிப்பிடுகிறது சமூதாயம்.

ஒவ்வொருவனும் செய்யும் தொழிலைக் கொண்டு அவனை தாழ்ந்தவன் உயர்ந்தவன் எனப் பிரிப்பது என்ன நீதி? என்ன நியாயம்? கடலிலே பிறந்து கடலிலே வாழ்ந்து, கடலிலே மரிக்கும் தாழ் குலத்தோர் எனப்படுபவர்கள் கோவில்களுக்கும் பொதுவிடங்களுக்கும் செல்லமுடியாது இருக்கின்றனர். ஏன் இந்த இழிநிலை? இன்று இந்தநிலை மாறி இருந்தாலும்கூட இன்னும் மாற இடமுண்டு என்பதை பரந்த மனப்பான்மை படைத்த எவரும் மறுத்துரைக்க மாட்டார்கள்.

கோவில்கட்ட மண் சுமந்தவர்கள்யார்? இந்த தீண்டத்தகாதோர் என ஒதுக்கப்பட்டவர்கள். அந்தக் கோயிலைக் கட்ட பணஉதவி செய்யாவிட்டாலும்கூட, தமது உடல் உழைப்பை நல்கியவர்கள் அவர்கள் அப்படிப்பட்டவர்களுக்கு கோயிலுக்குள் செல்லும் உரிமை எதற்காக மறுக்கப்படவேண்டும்? சாதியின் பெயரால் ஒரு சில வகுப்பினரை தள்ளி வைக்கும் நிலை முற்றாக மறைய வேண்டும். சாதி என்பது ஆண்டவனால் படைக்கப்பட்டதொன்றல்ல. அப்படியிருக்குமேயானல், கண்ணப்பர் போன்றவர்களின் சரித்திரம் நம் சமயவரலாற்றில் இடம் பெற்றிருக்க முடியாது. மற்றவர்களை சுரண்டிவாழும் மனிதர்கள் தம் பணத்தை, புகழை பாதுகாத்துக்கொள்ள ஏற்படுத்தப்பட்டதுதான் இந்த

(9-ம் பக்கம் பார்க்க)

## 11 வீரர்களுமே பந்து வீசிய புதுமை

டெஸ்ட் ஆட்டம் ஒன்றில் விக்கட் கீப்பர் உட்பட பதினொரு வீரர்களுமே பந்து வீசிய சம்பவம் ஒன்று அண்மையில் பாகிஸ்தானில் நிகழ்ந்துள்ளது.

இம்மாத ஆரம்பத்தில் பாகிஸ்தானுக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெற்ற 2-வது டெஸ்டிலேயே இச்சம்பவம் இடம் பெற்றது.

முதலில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 10 வீரர்களுமே பந்து வீசினர்கள். அவர்கள் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லைப் போலும். திடீரென காப்டன் கிரெய்க் சப்பல், விக்கட் கீப்பர் ரொட்னி மார்ஷை அழைத்து பந்து வீசச் சொன்னர். அவரும் 10 ஓவர்களை வீசினர். அவர் பந்து வீசியபோது காப்டன் சப்பலே விக்கட் காப்பாளராகப் பணிபுரிந்தார்.

11 வீரர்களும் பந்து வீசியபோதிலும் பாகிஸ்தானைச் சேர்ந்த ஆரம்ப துடுப்படி வீரர் தஸ்லிம் ஆரிவ்வை அவர்களால் ஆட்டமிழக்கச் செய்ய முடியவில்லை. அன்று அவர் ஆட்டமிழக்காது 210 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

-எஸ். வைகுந்தநாதன்
மகாவித்தியாலயம்,
வவுனியா.

## புத்தாண்டுச் சிரிப்பு

1-ம் பைத்தியம்: நான் முதன் முதலாக ஜனதிபதியிடம் தான் கைவிசேஷம் வாங்கினேன்

2-ம் பைத்தியம்: நான் ஒருவருக்கும் கைவிசேஷம் கொடுக்கவில்லையே

கு. குணதாசன்,
யாழ். இந்துக் கல்லூரி.

●

வசந்தன்: இந்தவருடப்பலன் எனக்கு கல்யாணமாம், அத்தோடு பெரிய கஷ்டமெல்லாம் வருமாம்.

செல்வன்: அது, கல்யாணத்தன்றை உன்கூட வந்திடுமே...!

●

யசோ: இவ்வருட பலனில் எனக்கு உச்சிகுளிரும் செய்திவருமாம்...

மதி: வேறு என்னவாம்...?

யசோ: இங்கிலாந்துபோவேனும்...

மதி: அதுதானே இங்கிலாந்து குளிரில் உச்சி குளிரும்தானே...

●

வந்தவர்: வருடப் பிறப்புக்காக உங்கள் மனைவி செய்திருக்கும் பலகாரமெல்லாம் ரொம்ப பிரமாதம்! ஏ ஒன்...!

வீட்டுக்காரர்! பக்கத்து வீட்டுக்காரியை ரொம்பப் புகழ்ந்தீங்க...இதெல்லாம் பக்கத்து வீட்டுக்காரர்கள் அனுப்பியது ... விலைவாசி ஏற்றத்தால் இம்முறை நாங்கள்பலகாரம் ஒன்றும் செய்யவில்லையே!

செல்வி வி. இந்துமதி,
வேம்படி மகளிர் கல்லூரி.

●

ராஜி: அம்மா நாளைக்கு புது வருடம் பிறக்கப்போகுது என்று சொல்லியே அதுக்கு அப்பா யாரு...? அம்மா யாரு...?

அம்மா: ?...?...?...

●

சவரிமுத்து! இந்த புதுவருடத்தில் எனக்கு மூன்று குழந்தைகள் பிறக்குமென்று சாதக பலனில் இருக்குது;

காசிப்பிள்ளை; ரௌ'த்ரீ' வருடமாச்சே...!

●

கணேஷர்: என்ன தலைவரே உங்களுக்கு தமிழ் என்றால் உயிராச்சே... இம்முறை உங்கள் தமிழ்ச்சங்கம், தமிழ் வருடப்பிறப்பன்று என்ன நிகழ்ச்சி நடாத்தப் போகிறது?

நல்லையா: வேறு ஒன்றுமில்லை ஆங்கில நாடக நிகழ்ச்சி தான்!

வி. சந்திரகுமார்,
யாழ். மத்திய கல்லூரி.

## உங்கள் திருமுகம்

'மாணவர் எண்ணம்' எமக்கு வழங்கிய கொரில்லா அரக்கனைப்பற்றிய சில வரிகள் குறிப்பிட விரும்புகிறேன்.

'கொரில்லா அரக்கன்' தொடர் நவீனம் மிக நன்றாக இருந்தது. இதில் கதாசிரியர் எமக்கு சலிப்பை ஏற்படுத்தாமல் கதா பாத்திரங்களை விரைவாக நகர்த்தி ஒரு கிரிக்கட் ஆட்டம் போல் விறுவிறுப்பாக ஆடியிருக்கிறார்.

மற்ற சிறப்பு அம்சம், மற்றைய கதைகளைப்போல் பாதி பாதியாக வந்து இறுதியில் கதையை ஒன்றாக்காமல் கதை வேலனுடனேயே செல்வது பாராட்டவேண்டிய விடயம். நல்ல சஸ்பென்ஸ்,

தலைப்பிலேயே எமக்கு பயத்தை ஏற்படுத்தி இறுதியில் எம்மை நடுநடுங்கவைத்து விட்டீர்கள், அப்பப்பா பயங்கரம் எமது மனதில் அதிக இடம்பிடித்தவர்கள் ஈசாப் குள்ளனும், கிளியும் தான். இக்கதையை வாசித்ததில் நல்ல திருப்தி, என்றாலும் விரைவில் முடித்திருக்கவேண்டியதில்லை.

செல்வன் மு. சுரேஸ்,
சென் ஜேம்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## அங்கே ஒரு கூட்டம்!

(குழந்தைப் பாடல்)

தம்பி:

அண்ணு! அண்ணு!! ஓடிவா.
அங்கே தெரியுது பெரும் கூட்டம்
அழகாய்க் காவடி ஆடுது பார்
அருகில் போய் நாம் பார்ப்போமா?

அண்ணு:

எட்ட நின்று பார்ப்பதனல்
எல்லாம் நமக்குத் தெரிகிறது
கிட்டப் பார்க்க நாம் போனல்
எம்மை நெரிக்கும் பெருங்கூட்டம்!

பெரிய மனிதர் தாம் என்பார்
பெரிய குணங்கள் உண்டென்பார்
சிறியோர் நாம்போய்ப் பார்ப்பதற்கு
சிறிதும் இடம்தான் விடமாட்டார்.

வே. அரியம்
மருத்துவ பீடம் யாழ். பல்கலைக் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஸ்லி மாலிப்பாய்
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-லதா
ஊருக்கு உழைப்பவன்
(புதிய பிரதி)

நாகம்மல் (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - சுஜாதா
தீபம்
(கலர் - புதியபிரதி)

REGAL JAFFNA Today only
JAMES BOND 007
LIVE AND LET DIE
Color
From Tomorrow
GEORGE SEGAL, GOLDIE HAWN in
The Duchess and The Dirt Water Fox
Panavision Color Comedy

ராஜா - (யாழ்நகர்) (சில தினங்கள மட்டும்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

சாந்தி யாழ் நகர் போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இன்று 20-4-80 மட்டும்
ராஜேஷ் கன்னு (இரட்டைவேடம்), சர்மிலா தாகூர்
"டாஷ்" ஹிந்தி
ஈஸ்ட்மன் கலர்
From Tomorrow "THE STING" (Color

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30 6-30, 9-30
சிவாஜி-சரோஜாதேவி- எம். ஆர். ராதா நடித்த
பாகப் பிரிவினை

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 4-45, 7-15 & 9-30
போன்: 7595
DIAMONDS

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த், மலேசியா சிவாஜி ராஜா லைன்குமார்
நடித்த
நெஞ்சுக்கு நீதி
இது ஒரு இலங்கை - இந்திய - மலேசிய கூட்டுத் தயாரிப்பு

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
ராஜபார்ட் ரங்கதுரை
(ஈஸ்ட்மன் கலர்—புதிய பிரதி)
நாளை முதல்
மூவன் பலஸ
[புதிய வெளியீடு—சிங்களம்]

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தொலைபேசி: 466
தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7-15 10-30
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
நிறம் மாறுத பூக்கள்
(வண்ணப்படம்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராதிகா-ஜெய்சந்திரன் ... -டிங்கிரி ...-V. R ...
ரத்தத்தின் ரத்தமே
வண்ணக்கலர்)
டைரக்ஷன் : ஜோ தேவ் ஆனந்த்

## சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடத் துச்சமாக மதித்துவிட்டான். சித்திராவுடன் என்னை இணைத்துக் கதை கட்டிவிட்டார்களே என்ற ஒரே ஒரு காரணத்துக்காகவே நான் மீண்டும், மீண்டும் சித்திராவைப் பற்றிச் சிந்திக்கிறேன். என் மீது பழி வரலாம், ஆனால் அதனுடன் சித்திராவுக்கொரு வாழ்வு வருமானால் நான் சந்தோஷப்படுவேன்.

அவளுக்கு வாழ்வளிக்க ஒருவன் முன் வருவானு?...அப்படி ஒருவன் வந்தாலும் சித்திராவின் மனதில் நிறைவேற்படுமா?... பலவாறு சிந்திக்கிறேன்!... 'பாலு அண்ணை' பரிமளா அழைக்கிறுள். நான் அவள் பக்கம் பார்வையைச் செலுத்துகிறேன். 'நான் ஒருக்கா வீட்டை போயிட்டு இரவுக்கு வாறென். அவரும் வேலை முடிஞ்சு வாற நேரமாச்சு. நான் இப்பபோய் இரவுக்கு ரெண்டு பேருமா வாறம்' தன் கணவரைக் குறிப்பிட்டுக் கூறினுள் பரிமளா. நான் ஆமென்றபாவனையில் தலையை ஆட்டுகிறேன்.

'சித்திரா! நான் போய்ப் பிறகு வாறன், இப்ப எல்லாம் குறைவுதானே! என்ன?' சித்திராவைப் பார்த்துக் கூறுகிறுள் பரிமளா. 'நீங்கள் போய்ப் பிறகு வாங்கோ, எனக்கிப்ப சுகமாயிருக்கு' அப்போதுதான் வாய் திறந்து பேசினுள் சித்திரா.

பரிமளா போய்விட்டாள். சித்திராவின் தாய் குசினிக்குள்ளே ஏதோ செய்து கொண்டிருக்கிறுள். நான் சில விநாடிகள் சிந்திக்கிறேன்.

...ஒரு முடிவோடு எழுந்து சித்திராவினருகே செல்கிறேன்...பனிப்படலங்களால் மூடிக்கிடக்கும் வானத்து நட்சத்திரங்களைப் போல அவளுடைய ஒளி வதனம் சோகத்தால் மூடிக்கிடக்கிறது. அந்தச் சோகத்தைத் துடைத்துவிடத் துடிக்கிறேன்!... ஆனால் அதை ஏற்பதும் மறுப்பதும் அவளைப் பொறுத்ததல்லவா!

சத்தியமாகச் சொல்கிறேன்! என் நெஞ்சில் கள்ளங்கபடமில்லை, நான் எடுத்துக்கொள்ளும் முடிவிலே அநுதாபமோ வேறும் சுயநலமில்லை, உண்மையான தியாக உணர்வோடு சித்திராவோடு பேசத்தொடங்குகிறேன்.

'சித்திரா!' என் குரல் நடுங்குகிறது. 'என்ன பாலு?' சித்திரா அமைதியாகக் கேட்டாள். 'குணபாலன் தனக்கென்று ஒரு வாழ்வை அமைத்துக்கொண்டான். உன் முடிவு!' 'அப்படி ஒரு முடிவுக்கு நான் வரவில்லை- பாலு!' துக்கம் தொண்டையை அடைக்க என்னை இடைமறித்துக் கூறினுள் சித்திரா.

'நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்!... அது தவறான முடிவாக இருந்தால் நீ என் மீது வெறுப்படையக்கூடாது. உன் விருப்பத்திற்கு மாறாக நான் ஒன்றையும் வற்புறுத்தமாட்டேன். நீ ஏற்கனவே என்மீது மதிப்பு வைத்திருந்தால் இந்தச் சூழ்நிலையில் நான் எடுத்திருக்கும் முடிவினை அந்த மதிப்புக் குறைய விடக்கூடாது. கேட்கவேண்டியது என் பொறுப்பு, ஏற்பதும் மறுப்பதும் உன் விருப்பு!... எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நான் உனக்கு முட்டுக்கட்டையாக இருக்கமாட்டேன்.' என் பேச்சுக்கு இடையே குறுக்கிடுகிறுள் சித்திரா. 'நான் அப்படி நினைக்கவில்லையே! உங்கள் மீது நான் நிறைய மதிப்பு வைத்திருக்கிறேன், அந்த மதிப்பை நீங்கள் இனியும் இழந்துவிடமாட்டீர்களென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது'' நான் எனக்குள் எடுத்துக் கொண்டிருக்கும் அந்த முடிவை சித்திரா விரும்பவில்லை யென்பதை அவளுடைய பேச்சுப் புலப்படுத்துகிறது.

சித்திரா தொடர்கிறுள்! ''என்னைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டவர் என்னை மனைவியாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் நானும் அவருடைய கணவன் மனைவியாகப் பழகியதை அவருடைய மனச்சாட்சியால் மறுக்கமுடியாது. அவர் என்னைவிட்டு வெறொரு துணையைத் தேடிக்கொண்டார்! அவரைப்போலவே நானும் அந்த முடிவுக்கு வந்தால்?... அவர் என்மீது மட்டுமல்ல உங்கள் மீதும் சேர்த்துச் சுமத்திய களங்கம் நிரூபிக்கப்பட்டு விடும்!

சித்திரா பேச்சை நிறுத்திக் கொண்டாள். நான் மௌனமாகவே இருக்கிறேன் ''உங்கள் மனதில் நீங்கள் எடுத்திருந்த முடிவு இப்பொழுது மாறியிருக்குமென்று நினைக்கிறேன். அப்படி மாறுதிருந்தால் நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் முடிவு தான் ஏற்றுக் கொள்ளக் கூடியதாயில்லை இருக்கும்'' தொடர்ந்து கூறினுள். சித்திரா ''இல்லை சித்திரா! எனது முடிவை நீ ஏற்றுக் கொள்ளவில்லையென்பதை உனது பேச்சின் மூலம் நான் நான் புரிந்து கொண்டேன்! ஆனால் நான் எடுத்துக் கொண்ட அந்த முடிவு எனக்காக அல்ல'' நான் கூறுவதற்கிடையே குறுக்கிட்ட சித்திரா ''இல்லை பாலு! உங்கள் தியாக உணர்வை நான் புரிந்து கொண்டேன்'' —நன்றியுணர்வுடன் கூறினுள்

நான் எடுத்துக் கொண்ட முடிவை வெளியிடாமலே மாற்றிக் கொள்கிறேன். ''உண்மை என்றுவது ஒரு நாள் வெளிச்சத்துக்கு வராமல் போகாது! அந்த நாள் வரும் வரையில் ஒருவருடைய மனைவி என்ற மனத்திருப்தியோடு இந்த இருட்டிலேயே இருந்துவிடுகிறேன்'' —மனநிறைவோடு கூறிய சித்திராவிடமிருந்து நானும் திருப்தியுடன் விடைபெறுகிறேன்!

(யாவும் கற்பனை)

ஹரன் ... 
... 4 காட்சிகள்
சிவாஜி
(இரு வேடம்)
பட்டிக்காட்டு ராஜா

## ஒரு மாற்றுப் ......

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பாலையும் ஜப்பானையும் சாடியுள்ளார். அமெரிக்காவின் முடிவை அமெரிக்க விளையாட்டு வீரர்களே எதிர்க்கிறார்கள். ஒலிம்பிக் போட்டிக்கு ஒரு மாற்று நடாத்துவது என்பது ஒலிம்பிக் இயக்கத்தைப் பிளவுபடுத்தும் ஒரு நடவடிக்கை. இந்த இயக்கம் இப்படிப் பிளவுபடுவதனால் நன்மையடையப் போவது எவருமில்லை நாடுகள் மத்தியில் பகைமை வளர்ந்து உலக அழிவுக்கு இட்டுச் செல்வதற்கே இப்பிளவு துணைபுரியும்.

இதுவரை 104 நாடுகள் ஒலிம்பிக் அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ளன. இலங்கை உட்பட பெரும்பாலான நாடுகளில் இந்த முடிவை எடுத்தவை தேசிய ஒலிம்பிக் கமிட்டிகள் தாம். அரசாங்கங்கள் இதில் தலையிடவே இல்லை.

நான்கு வருடங்களாக ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றும் நோக்கத்துடன் இடையருது, கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டுள்ள பல்லாயிரக்கணக்கான விளையாட்டு வீரர்கள், அரசியல் பேதங்களுக்காகத் தம்மைப் பலியிடத் தயாராக இல்லை.

ஒலிம்பிக் இயக்கம் பிளவுபடாதிருப்பதும் விளையாட்டில் அரசியலைக் கலக்காதிருப்பதும் எதிர்கால உலக அமைதிக்குப் பெரிதும் துணைபுரியும் ஏனெனில் ஒலிம்பிக் அரங்குகளில் இனம், மதம், நிற வேறுபாடின்றி, அரசியல் வேறுபாடுகளையும் மீறி ஒருவரை ஒருவர் ஆரத் தழுவும் விளையாட்டு வீரர்கள், நாளைய அரசியல் தலைவர்களாகும் போது, விளையாட்டுத் துறையிலிருந்த அதே மனப்பான்மை அரசியலிலும் பிரதிபலிக்கலாம் அல்லவா!

## டாக்டர் ஹானிமன் பிறந்த நாள் விழா

(யாழ்ப்பாணம்)

ஹோமியோபதியின் தந்தை டாக்டர் சாமுவேல் ஹனிமனின் 225-வது பிறந்த தான் ஞாபகார்த்த விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ் பொதுசன நூல்நிலைய சாம் சபாபதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் அகுபஞ்சர் பிறப்பில் சித்தியடைந்தவர்களுக்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபரும், யாழ் பாவட்டச் செயலாளருமான திரு. கே. யோகேந்திரா துரைசுவாமி சான்றிதள் வழங்குவார்.

ஹோமியோபதி மீளாய்வு வகுப்புகளில் பங்குபற்றியவர்களுக்கு நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் சான்றிதள் வழங்குவார்.

வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தினரின் 21-வது ஆண்டு விழா மலரின் முதலாவது பிரதியை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் வழங்குவார். (கொ)

## இந்திரா - ஹக் சந்திப்பு

(சாலிஸ்பரி, ஏப். 19)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக்கும் ஸிம்பாப்வே தலைநகரான சாலிஸ்பரியில் சந்தித்து 50 நிமிட நேரம் பேச்சு நடத்தினர். (இ)

## மனிதனே...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சாதி எனலாம். நம்மிடையே பரந்த மனப்பான்மையோடு சிந்திக்கக் கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் நன்றாக சிந்தித்து முடிவெடுக்கட்டும், தேவைதானு நமக்கிந்த தீண்டாமை? பிறக்கும் போது சுதந்திரமாகப் பிறக்கும் நாம் சுதந்திரமாக வாழ்வோம். இப்பூமியில் பிறந்து விட்டோம் என்றே ஒரு நாள் இறப்பது உறுதி. அப்படி இறப்பதற்குள்ளே, நமக்குள்ளேயுள்ள வேறுபாடுகளைக் களைந்தெறிந்து எமது எதிர் காலம் தமிழ் மக்கள் சீருடன் வாழ வழிவகுப்போமாக.

க. சரஸ்வதி,
யாழ். இந்து மகளிர் கல்லூரி

## பற்பாதுகாப்பு......

1-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் எண்ணத்திற்கு மருந்து வகைகளைப் பாவிக்காது, கை மருந்துகள் செய்யமுடியாது வைத்திய உதவியை நாடுவது நன்று.

முரசைக் கைவிரலினுல் தேய்த்து இரத்தோட்டத்தைக் கூட்டுவது நன்மை பயக்கும் எமது மூக்தோர் இதே காரணத்திற்காக நல்லெண்ணெய் தேய்த்துவருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். உணவின் பின் கரும்பு, அப்பிள், ஓடியல், நெல்லிக்காய், தோடம்பழம், இஞ்சி முதலியன நன்ருகச் சப்பிச்சாப்பிடுவது நன்மையளிக்கும். உணவுக்குப் பின் வாய்சுத்தஞ் செய்தால் மறு உணவுவரைக்கும் ஒருவித உணவுப்பண்டமும் சாப்பிடுதல் நல்லதல்ல மேல்நாடுகளில் "Dental Floss" என்னும் நுண்ணியபொருளைப் பற்களுக்கிடையிலுள்ள உணவெச்சங்களைத் துரிதமாக அகற்றும்பொருட்டுப்பாவித்து வருகிறார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிவு விற்பனை

சலுசலா பிடவைகள்
சலுசலா தையல் நூல்கள்
லேடன் தயாரிப்புகள்
கோல்டன் பிறசியர்கள்
மூஸாஜி பொலித்தின்வகைகள்
முயல் மார்க் நூல் வகைகள்
கீத்தா ஸ்டிப் கொலர்கள்

## சிக்கோ டிரேடர்ஸ்

43, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.


# அமெரிக்க தூதுவர் 'ஈழநாடு' அலுவலகம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்கத் தூதுவர் திரு. டொனல்ட் ஆர் ருசெயின்ற் நேற்றுப் பகல் "ஈழநாடு" அலுவலகத்திற்கு விஜயம் செய்து ஆசிரியர், பொதுமுகாமையாளர் மற்றும் உதவி ஆசிரியர்களையும் சந்தித்து பொதுவான விடயங்கள் பற்றி கலந்துரையாடினார்.

தமிழ் மக்களின் இன்றைய அரசியல், பொருளாதார நிலை குறித்து திரு. ருசெயின்ற் அவருடன் கலந்துரையாடினார்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் விஜயம்செய்த அவர் அங்குள்ள நூல் நிலையத்தையும் பார்வையிட்டார்.

யாழ். கோட்டையையும் பார்த்த தூதுவர் பகல் ரயிலில் கொழும்பு திரும்பினார். (இ)


## NEW CAMBRIDGE

திருநெல்வேலிச் சந்தி
5-5-80ல் ஆரம்பம்
G. C. E. (A/L) 81, 82
தாவரவியல்: திரு. சிவவீரசிங்கம்
விலங்கியல்: பிரபல ஆசிரியை
இரசாயனம்
திரு. சண்முகதாஸ் (கண்ணன்)
பௌதிகம்: பிரபல ஆசிரியர்
தூயகணிதம்-பிரயோக கணிதம்
பிரபல ஆசிரியர்
மேலதிக விபரங்கட்கு:
V. M. PACKKIYANATHAN.


# தேசிய ஒற்றுமையை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டியும் இவர்கள் கூடுதலான அளவு சிரமதான வேலைகளைச்செய்து முன்னணியில் நிற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

வடபிரதேச ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் திரு. வே கணேசலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

"அரசு மகாவலித் திட்டத்திற்கு வருடமொன்றிற்கு 300 கோடி ரூபாவைச் செலவு செய்கிறது இதில் தமிழ் மக்களுக்கும் பங்குண்டு எவர் எம்மைத் தூற்றினாலும் அதைப் பொருட்படுத்தாது சிரமதானத்தில் ஈடுபடவேண்டும்.

"மதுறு ஓயாவில் இருந்து அனுராதபுரத்திற்கு மகாவலி நீர் திசைதிருப்பப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு நிச்சயம் வரும். அதுவும் ஜனாதிபதி ஜே. ஆரின் ஆட்சிக் காலத்திலேயே திசைதிருப்பப்படும். தமிழினமும் மகாவலியின் சொந்தக்காரர்கள் என்பதை மனதிற் கொண்டு செயல்பட வேண்டும். அரசு எம்முடன் ஒத்துழைக்கும் பட்சத்தில் நாமும் அரசுக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும்."

திரு. ஏ. ஜி. இராஜசூரியர் பேசுகையில், "மகாவலி நீரை யாழ்ப்பாணத்திற்கு திசை திருப்ப அரசு விரும்பமாட்டாது எனப் பலர் கூறுகிறார்கள். லக்சபானவில் இருந்து பெறப்படும் மின்சாரம் யாழ்ப்பாண மக்களின் உபயோகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் மகாவலி மட்டும் ஏன் திசைதிருப்பப்படமாட்டாது" என்று வினவினார்.

மற்றும் பலரும் பேசினர். (கொ)

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லதம்பி தங்கம்மா

நல்லதம்பியின் அன்பு மனைவியும், சந்திரவதனா (லண்டன்), தவமலர், மகேஸ்வரன் (தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை, மேற்கு ஜெர்மன்) ஆகியோரின் அருமைத் தாயாருமாகிய நல்லதம்பி தங்கம்மா அவர்கள் 19-4-80-ல் காலமானார்.

இவரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இலக்கம் 3, யாழ். வீதி,
யாழ்ப்பாணம். (5531)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை தர்மரட்டினம் (துரை)

செல்லத்துரை தருமரட்டினம் (துரை) (உரிமையாளர், தேவதுரவு எஸ்டேட், செம்பியன்பற்று) காலமானார். இவர் தங்கமலரின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற மலாயன் பென்சனியர், திரு. திருமதி செல்வத்துரை அவர்களின் அன்புமகனும், கோப்பாய் வடக்கு காலஞ்சென்ற திரு. செல்லையா, திருமதி செல்லையா ஆகியோரின் மருமகனும், பொன்னம்மா, இராசமணி, சுப்பிரமணியம் (வைத்திய கல்லூரி, மங்களூர்) அவர்களின் சகோதரரும், டாக்டர் இராஜரட்னம், கண்ணுத்துரை (சீமெந்துக் கூட்டுத்தாபனம்), திருமதி சிவசுப்பிரமணியம், திருமதி சபாபதி, தங்கராஜா, குலசேகரம், சகுந்தலாதேவி, செல்வகுமார் ஆகியோரின் அருமை மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து பூவோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

காங்கேசன்துறை வீதி, மருதனுமடம். (5539)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா கந்தையா

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா (இளைப்பாறிய புகையிரதப் பகுதி உத்தியோகத்தர்) வின் மனைவி திருமதி அன்னம்மா காலமாகிவிட்டார். இவர் மயில்வாகனத்தின் சகோதரியும், கனகசபாபதி, தியாகராசா (I C O. மூருங்கன்), அன்னலட்சுமி, இராசலட்சுமி, பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புத் தயாரும், இரத்தினசிங்கம் (நைஜீரியா), E K. தங்கராஜா, மகேந்திரன் (ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி), சரோஜினி ஆகியோரின் அன்புமாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக இன்று (ஞாயிறு) பிற்பகல் 3 மணியளவில் இல. 408, காங்கேசன்துறை வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: கனகசபாபதி (5540)

# தமிழ்க் காங்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கீதத்தை இசைக்க அங்குகூடி நின்றவர்களும் கீதம் இசைத்தனர்.

திரு குமார் பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: வெளியில்நின்று கொண்டு கட்சிக்குச் சொந்தம் கொண்டாடுபவர்கள் கடந்த 8 வருடங்களாகக் கட்சிக்கு என்ன செய்தார்கள்? தமது சுயநலத்திற்காகப் பல வருடங்களாக இருந்துவந்த காரியாலயத்தை இல்லாது செய்தார்கள் கட்சிக்குச் சொந்தமான தளபாடங்களைக்கூட இல்லாது செய்துவிட்டார்கள் இதுதான் அவர்கள் கட்சிக்கு செய்த தொண்டு

எமது கட்சியை ஆரம்பித்த முதுபெரும் தலைவர்கள் இன்றும் இக்கட்சியிலேயே இருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். கனகநாயகம் பேசுகையில் கூறியதாவது:

எமது தலைவர்அமரர் பொன்னம்பலம் எந்த நிலையிலும் தமிழ் இனத்தை காட்டிக் கொடுக்கவில்லை. தனிச்சிங்களச் சட்டத்தை எந்த நிலையிலும் அவர் ஏற்கவில்லை. அப்படியிருக்க இன்னும் ஒரு சிலர் ஒப்பந்தம் என்ற பெயரில் தனிச் சிங்களச் சட்டத்தை ஏற்றுள்ளனர்.

தமிழ் இளைஞர்களை தவறான வழியில் நடத்திச்சென்று ஆதாயம் தேடியவர்கள் இன்று தமிழ் இளைஞர்கள் விழித்தெழுந்ததைக்கண்டு திகிலடைந்துள்ளனர். இளைஞர்களை இனியும் ஏமாற்றமுடியாது என்பதை உணர்ந்த அவர்கள் இன்று எமது பாதைக்கே திரும்பி வரப்பார்க்கிறார்கள்.

அமரர் பொன்னம்பலம் 44ம் ஆண்டுதொட்டு ஒரே கொள்கையைக் கடைப்பிடித்துவந்தார். அவரின் வழியில் இன்றைய இளைஞர்கள் செல்ல வேண்டும். அப்போதுதான் எமக்கு வெற்றிகிட்டும்.

கட்சிக்கென ஒரு கொடி வேண்டும். என வாதாடியவர் அமரர் பொன்னம்பலம் அதன் பின்தான் இன்று ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு கொடி என வழங்கப்பட்டுள்ளது.

ஒரு கட்சியையோ அன்றி ஒரு நாட்டையோ காப்பாற்ற வேண்டுமானால் முதலில் அவர்கள் தமது கொடியைக் காப்பாற்றவேண்டும். தம்பி குமார் பொன்னம்பலம் காங்கிரஸ் கட்சியையும், கொடியையும் மாற்றாரிடமிருந்து காப்பாற்றியுள்ளார். அதைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது என்பதை உணர்ந்து நாம் செயல்படவேண்டும் (கொ)

## சீட்டிழுப்பு முடிவுகள்

14-04-1980ல் யாழ். சட்டக்கல்வி நிலைய மாணவர் மன்றத்தால் இழுக்கப்பட்ட அதிஸ்டலாபச் சீட்டில் பரிசு பெறும் சீட்டுக்கள் விபரம்:

| | | |
|---|---|---|
| 1ம் | பரிசு | 3485 |
| 2ம் | பரிசு | 2214 |
| 3ம் | பரிசு | 1260 |

- செயலாளர்

5538

# 'தமிழ் மக்களின் எதிர்காலம்'
## சூரியர் கருத்தரங்கு நடத்துகிறார்

(கொழும்பு)

முன்னாள் தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் தமிழ் மக்களின் எதிர்காலம்குறித்து கருத்தரங் கொன்றைஇன்று பகல் இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடத்துகிறார்.

இன்றைய அரசியல் நிலையை அவதானித்த பின்னர் அதனை அடிப்படையாக வைத்து 'எதிர்காலத்தில் தமிழ்மக்கள் எவ்வாறு நடத்தப்படவேண்டும்' என்பது குறித்து இக்கருத்தரங்கில் அவர் கருத்துரை வழங்குவார்' (ப-இ)

# துப்பாக்கிச் சண்டையில் பொலிஸ் கான்ஸ்டபிளும் கேடி குணசேனவும் பலி!

(கொழும்பு)

பொலிசாரால் தேடப்பட்ட கேடி ஒருவருக்கும் பொலிசாருக்குமிடையே நடந்த துப்பாக்கிச்சண்டையில் கான்ஸ்டபிள் ஒருவரும் கேடியும் பலியானார்கள்.

இச்சம்பவம் தங்காலையில் நடைபெற்றது.

பல கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாகத் தேடப்பட்ட குணசேன என்ற கேடியும் அவரது நண்பரும் டிக்வெலவிலிருந்து அம்பாறைக்குச் செல்லும் பஸ்ஸில் பிரயாணம் செய்வதாகப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலை அடுத்து தங்காலைப் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் திரு. இந்திரன் தலைமையில் கான்ஸ்டபிள்களான மகிந்த, ராமலிங்கம், நவரத்தன, மகிந்தசிறி ஆகியோரடங்கிய பொலிஸ் கோஷ்டி குறிப்பிட்ட பஸ்ஸை முற்றுகையிட்டபோது பஸ்ஸின் சாரதிக்கருகே நின்ற குணசேன பொலிசாரை நோக்கி துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தமது நண்பருடன் பஸ்ஸின் ஜன்னலூடாகப் பாய்ந்து தப்பி ஓடினாராம். அத்துப்பாக்கிச் சூட்டுக்கு மகிந்த என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் பலியானார்.

கேடிகளைத் துரத்திச் சென்ற பொலிசார் அவர்கள் இருவரையும் வீடொன்றில் கண்டுபிடித்தபோதிலும் அவர்களை நெருங்கமுடியாத நிலையில் இருந்தனர்.

வீட்டுக்காரரைப் பணயம் வைத்திருந்த அவர்கள் இருவரில் குணசேன பொலிசாரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய பொலிசாரும் திருப்பிச்சுட்டனர்.

அடுத்து அங்கே பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தபோதிலும் கேடி குணசேனவை உயிருடன் பிடிக்க முடியவில்லை.

பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு குணசேன பலியானார். மற்றையோர் தப்பி ஓடிவிட்டனர்.

# 'அமிர்' தாக்கினாராம் பொலிசில் புகார்

(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் தம்மைத் தாக்கியதாக சின்னையா சுப்பிரமணியம் என்ற வாலிபர் பொலிசில் புகார் செய்துள்ளார். இவர் இப்பொழுது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள ஒரு படமாளிகைக்கு அருகில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக்கொண்டிருந்ததாகவும் அப்பொழுதே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த மேற்படி வாலிபர் தமது புகாரில் தெரிவித்துள்ளார்.

வீதியால் வாகனங்களில் சென்றவர்களுக்கும் தாம் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்ததாகவும் அவ்வழியில் ஜீப்பில் வந்த திரு. அமிர்தலிங்கத்துக்கும் ஒரு துண்டுப்பிரசுரத்தைக் கொடுத்ததாகவும் அவர் அதை வாங்கி வாசித்துக் கொண்டு ஜீப்பில் சிறிது தூரம் சென்றுவிட்டுப் பின்னர் ஜீப்பில் பின்புறமாகத் திரும்பி வந்து இறங்கி தன்னைத் தாக்கிவிட்டு ஜீப்பில் சென்றுவிட்டார் என்றும் அதன் பின் அப்பையா என்பவரும் தம்மைத் தாக்கினர் என்றும் திரு சுப்பிரமணியம் பொலிசில் கூறியுள்ளார்.

இப்புகார் பற்றி பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

துண்டுப்பிரசுரங்கள் திரு அமிர்தலிங்கத்தின் முகத்தில் வீசப்பட்டது என்றும் அதன் விளைவாகவே இந்தப் புகார் எழுப்பப்பட்டுள்ளது என்றும் தமிழர் விடுதலைக்கூட்டணி வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் பொலீஸ் விசாரணையில் திரு. அமிர்தலிங்கம் என்ன தெரிவித்துள்ளார் என்பது உடனடியாகத் தெரியவில்லை. (ஜா)

## பாலஸ்தாபனம்

(மன்னார்)

நானாட்டான் முத்துமாரியம்மன் கோவில் பாலஸ்தாபன அபிஷேகம் நாளை முதல் நடைபெறும் (வெ-இ)

## பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தையைச் சேர்ந்த திரு. ஆ. சங்கரப்பிள்ளை சமாதான நீதவானாக நியமிக்கப் பெற்றதைப் பாராட்டுமுகமாக இன்று மாலை சங்கரத்தை கிராமமுன்னேற்றக் கழகம் கழக மைதானத்தில் பாராட்டு விழா ஒன்றை நடத்துகிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible] தாரரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 20-ம் [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the Gener[illegible] Lanka under No. QB/39/48/78 The Eelanaadu, Post Box No. 49, Telegram: 'Eelanaadu'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org